வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 24.08.2024 சனிக்கிழமை | இதழ் : 237 | பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# ஈழத்தமிழர் பிரச்னை தீர்வுக்கு சகலரும் ஓரணியாக வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் வீரமணி



- தமிழ் பொது வேட்பாளருக்கும் வரவேற்பு
- மீனவர்கள் பேசுவதே பிரச்னை தீர வழி!

யாழ்ப்பாணம், ஒக. 24

ஈழத் தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு முதலில் சகல தரப்பினரும் ஓரணியில் திரள வேண்டும். ஒத்த கருத்துள்ளவர்களை இணைக்கும் பணியை திராவிடர் கழகம் செய்யும் - இவ்வாறு தமிழ்நாட்டின் மூத்த அரசியல்வாதியும் திராவிடர் கழகத் தலைவருமான கி. வீரமணி தெரிவித்துள்ளார்.

அத்துடன், வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிடுவதையும் அவர் வரவேற்றுள்ளார்.

எமது சகோதர ஊடகமான டான் தமிழ்ஒளி தொலைக்காட்சியின் 'ஸ்பொட்லைற்' நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்ததார்.

மேலும், "ஈழத் தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும். இதற்கு முதலில், ஈழத் தமிழர்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும். அப்போது தான், தீர்வு காண்பது சாத்தியம்.

"தமிழ்நாடு இலங்கை

11



## 400 வருடங்கள் பழமைவாய்ந்த சிவனாலய மீளமைப்பு ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக. 24

400 வருடங்கள் பழமை வாய்ந்த சிவன் ஆலயத்தை அதன் வடிவம் மாறாமல் மீளுருவாக்கும் பணி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை - துணவியில் அழிவடைந்த நிலையில் காணப்படும் பிரகேதீஸ்வரர் ஆலயமே இவ்வாறு மீளுருவாக்கப்படவுள்ளது.

மீளுருவாக்க ஆரம்பப் பணி யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் புஸ்பரட் ணம் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கி வைக்கப்பட்டது.

11

## முன்னாள் ஜனாதிபதிகள் சகலரும் குற்றவாளிகளே!

### அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 24

சந்திரிகா, மகிந்த, கோட்டாபய, மைத்திரிபால, ஆகிய முன்னாள் ஜனாதி பதிகள் அனைவரும் குற்றவாளிகள் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. ரணில் விக்கிரமசிங்கவும் அடிப்படை மனித உரிமைகளை மீறிய குற்றவாளியாவார் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார

11

பிரதான வேட்பாளர்களின் வருமானம்:

## முதலிடத்தில் திலித் ஜயவீர ரணிலுக்கு கடைசி இடம்!

கொழும்பு, ஒக. 24

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் அதிக மாத வருமானம் பெறும் வேட்பாளராக திலித் ஜயவீரவும் குறைந்த மாத வருமானம் பெறும் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இலஞ்சம், ஊழல் மற்றும் சொத்துகளை

11

## இந்திய துணைத் தூதரகத்தை கிழக்கில் அமைக்க கோரிக்கை

### தமிழ் அரசுக் கட்சி விடுத்தது

மட்டக்களப்பு, ஒக. 24

இந்திய துணைத் தூதரகம் ஒன்றை கிழக்கு மாகாணத்தில் அமைக்குமாறு இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் இலங்கை தமிழ் அரசுக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்புக்கு வருகை தந்த இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை சந்தித்த தமிழ் அரசுக் கட்சியின் கிழக்கு மாகாண பிரதிநிதிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

மேலும் இந்த சந்திப்பில், கிழக்கில் இந்தியாவின் முதலீட்டு திட்டங்கள் மற்றும் கிழக்கு

11

## தமிழ்ப் பொது வேட்பாளரின் பரப்புரை பயணம் ஆரம்பம்!

### செல்லும் இடந்தோறும் மக்கள் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக. 24

தமிழ்ப் பொதுவேட்பாளரின் 'நமக்காக நாம்' தேர்தல் பரப்புரைப் பயணம் நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை - சக்கோட்டை கொடிமுனையிலிருந்து ஆரம்பமானது.

இந்தப் பரப்புரை பயணம் பொலிகண்டி, வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி, தொண்டைமானாறு, வளலாய், பலாலி, தையிட்டி,

11



## இனப்பிரச்னை மேலோங்கியமையே பொருளாதார பிரச்னைக்கு காரணம்!

### தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன்

யாழ்ப்பாணம், ஒக. 24

"இனப்பிரச்னை மேலோங்கியதாலேயே நாட்டில் பொருளாதார பிரச்னை ஏற்பட்டது", என்று கூறியுள்ளார் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக பா. அரியநேத்திரன் போட்டியிடுகிறார். இவரின் பரப்புரை பயணம் நேற்று சக்கோட்டை முனையில் ஆரம்பமானது. பொத்துவில் வரை பயணமாகவுள்ள இந்தப் பரப்புரை பயணத்தின் ஆரம்பத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில்,

"இந்தத் தேர்தலை நாங்கள் ஜனநாயக ரீதியிலான போராட்டமாகவே பார்க்கின்றோம். இனப் பிரச்னை என்ற விடயம் மேலோங்கியதன் விளைவே நாட்டில்

11

## ஜனாதிபதி தேர்தலின் பின்னர் உள்ளூராட்சி தேர்தல் நடக்கும்!

### மகிந்த தேசப்பிரிய கூறுகிறார்

கொழும்பு, ஒக. 24

ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் உள்ளூராட்சி தேர்தல் இடம்பெறும் என முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய எதிர்வு கூறியுள்ளார்.

11

## டிஜிற்றல் முறையில் உள்ளூராட்சி தேர்தல்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 24

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக டிஜிற்றல் தேர்தல் முறையைப் பயன்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

11

## அமிர் நினைவு பேருரை வீரமணி ஆற்றுகிறார்!

யாழ்ப்பாணம், ஒக. 24

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள தமிழ்நாட்டின் மூத்த அரசியல்வாதியும் திராவிடர் கழகத் தலைவருமான கி. வீரமணி இன்று நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார்.

முதல் தமிழ் எதிர்க்கட்சி தலைவரும் தமிழர்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஒக. 24

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று சனிக்கிழமை ஆனைக்கோட்டை சாவல்கட்டு அத்திக்குழி அருள்மிகு ஞான வைர வர் காளி அம்பாள் ஆலய பஜனை குழுவினரின் நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப் பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திரு விழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண் டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திரு முன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோயில் பிரதமகுரு சிவசிறீ பரமேஸ். ஜெய குமாரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், காரைநகர் பிரதேச செயலாளர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் பிரதம அதிதியாக வும் கலாநிதி வே. சங்கரநாராயணன் கௌரவ அதிதியாகவும் வவுனிக்குளம் நீர்பாசனப் பொறி யியலாளர் சர்வானந்தன் சர்வராஜா, காரைநகர் கிழவன்காடு கலாமன்றத் தலைவர் நடராசா சோதிநாதன், ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் யோகலட்சுமி சோமசுந்தரம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் பங்கேற்பர்.

இதில், காரைநகர் சிவகாமி அம்பிகா சமேத சிதம்பரேஸ்வரர் அறநெறி பாடசாலை, திக்கரை இந்து அறநெறி பாடசாலை, பாலாவோடை முத்துமாரி அம்மன் அறநெறி பாடசாலை, கல்வந் தாழ்வு முருகன் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக "உஷாகானம்" இசைக்கல்லூரி மாண வர்கள் வழங்கும் வாத்திய சங்கமம் நிகழ்வு நடை பெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

# யாழில் காய்ச்சல் காரணமாக ஒரு வயது குழந்தை உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஒக. 24

யாழ்ப்பாணத்தில் காய்ச்சல் காரணமாக ஒரு வயதுக் குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது. தம்பாட்டி, ஊர்காவற்துறை பகுதியைச் சேர்ந்த ஒரு வயதுடைய குழந்தையே உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் 21ஆம் திகதி யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் குழந்தை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி குழந்தை 21ஆம் திகதி இரவு 11 மணியளவில் உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டுள்ள தோடு, காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற் கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# ஜனாதிபதி வேட்பாளர் இலியாஸ் காலமானார்

கொழும்பு, ஒக. 24

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடும் அய்ட்ரூஸ் முகமது இலியாஸ் (வயது 78) காலமானார்.

இவர் தமிழர் விடுதலை கூட் டணியின் சார்பில் 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் போட்டியிட்டவர்.

இவர், 1994ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப் பினராக தெரிவாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமிர்தலிங்கம் - 97ஆவது பிறந்ததினம்: மறைக்கப்படும் ஓர் அரசியல் சொத்து

- மாலி

இலங்கைத் தமிழர்களுடைய விடுத லைப் போராட்டம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடன்தான் தொடங் குகிறது. இதை, அமிர்தலிங்கத்துடன் தொடங்கியது என்றும் சொல்லலாம். முப்பது வருடங்கள் சாத்வீக வழியில் தீரங்களையும் தியாகங்களையும் நிறைத்த இப்போராட்டம், பின்னர் தீவிரவாத போக்கில் ஆயுதப் போராட்ட மாக மாற்றம்பெற்றது. எஸ். ஜே. வி. செல்வநாயகமோ அல்லது ஜீ. ஜீ. பொன் னம்பலமோ சந்தித்திருக்காத மிகச் சிக்கலான ஒரு மாறுதல் காலத்து தலைவ ராக அமிர்தலிங்கம் விளங்கினார். அது வும், முன்னரெப்போதும் இல்லாத வித்தி தில் அக்காலத்தில் பாராளுமன்றத் தின் எதிர்க்கட்சித் தலைவராகவுமிருந் தார். அத்துடன், நாட்டைப் பிரிக்கும் தனி நாடு கோரிக்கையுடன் அவர் அப்போது பாராளுமன்றம் சென்றிருந்தார்.

இப்படி, ஓர் அசுர நெருக்குதலில் மார்தட்டி, சாதுரியத்துடன் நிமிர்ந்து நின்ற ஒரு பெரும் தலைவர் அமிர்த லிங்கம். தமிழீழ விடுதலைப் புலிகளை யும் அதனையொத்த இயக்கங்களையும் தடை செய்வதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது, குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்ட எதிரியைப்போல, அத்தனை சட்டவாதி களினதும் சரமாரியான கணைகளை எதிர்த்து, தன்னையும் அவர்களையும் (புலிகளையும்) காட்டிக்கொடாது, கத்திமேல் நடந்ததான அந்த பேச்சு, அந்த நிலைமாறுகால தலைவனை புடமிட்டு காண்பித்தது.

துணிச்சலும் தீரமும் ஆளுமைகளும் மிக்க அரசியல்வாதியான அமிர்தலிங் கம், இலங்கையின் ஓர் உன்னத அரசியல் கனவானாக பரிணாமமானதை இக் காலப்பகுதியில் ஒரு பாராளுமன்ற நிருப ராக அருகிருந்து நான் அவதானித்தேன் - கண்டேன்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ் மக்களின் அரசியலுக்கு அவர் பயன்படுத்தும் சாதுரியத்தில் அரசாங் கம் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை கொண்ந்தது. ஆனால், இலங்கையின் மிகச் சிறந்த எதிர்க்கட்சித் தலைவர் ஒருவராகவே அனைத்துக் கட்சிகளும் பல்கலைக்கழக மாணவர் கள், பௌத்த பிக்குகள் உள்பட்ட பெரும்பாலான சிங்கள மக்களும் அவரை மதித்தார்கள். உலக அரசியலில் சரித்திரமாகும் சிறிமாவோ பண்டார நாயக்க, தன்னுடைய குடியுரிமையையும்



இழந்து, அந்த பாராளுமன்ற சபையை விட்டு வெளியேறுகையில் சொன்ன கடைசி வார்த்தை, 'கௌரவ எதிர்க்கட் சித் தலைவரையும் கௌரவ நல்லூர் உறுப்பினரையும் (மு. சிவசிதம்பரம்) என் உயிருள்ளவரை மறக்கமாட்டேன்'. அவர் வார்த்தைகளால் மாத்திரம் இதைச் சொல்லவில்லை, அவரின் கண்களில் அப்போது கண்ணீர் சொட்டியது.

ஐந்து நிமிடமோ அல்லது ஐந்து மணித்தியாலங்களோ தமிழோ அல்லது ஆங்கிலமோ சந்தர்ப்பத்துக்கும் சபைக் கும் ஏற்ப பேசவல்ல மகாசமர்த்தர் அமிர்தலிங்கம். இலங்கையின் அரசிய லமைப்பு 1978இல் நிறைவேற்று அதி காரமிக்க ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மாற்றப்பட்டபோது, அந்த சட்டமூலம் மீதான விவாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குபற்றவில்லை. ஆனால், ஏன் தாங்கள் அதில் பங்குபற்றவில்லை என்பதை விளக்கி, அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் ஐந்து மணித்தியா லங்கள் உரையாற்றினார். அது, அப்போது அந்த பாராளுமன்றத்தில் பேசப்பட்ட மிக நீண்ட உரையாக இருந்தது. அமிர்தலிங்கத்தையடுத்து பிரதமர் ரணசிங்க பிரேமதாஸ பேசி னார். அவர் ஐந்தரை மணித்தியாலங்கள் பேசினார். அமிர்தலிங்கத்தின் பேச்சு சாதனையாகிவிடக்கூடாது என்பதற் காகவே பேசினார்.

ஆனால், அமிர்தலிங்கம் பேசி அமர்ந்தபோது, அப்போது சபாநாயகராகவிருந்த ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அக்கிராசனத்தில் இருந்தபடி, குறிப்பொன்றை பாராளுமன்ற செயலாளர்மூலம் அமிர்தலிங்கத்திடம் சேர்ப்பித்தார். அதனைப் படித்த அமிர்தலிங்கம், சபாநாயகரைப் பார்த்து தலையை அசைத்து, ஒரு புன்முறுவல் செய்தார்.

'இப்படி ஓர் அருமை வாய்ந்த உரைக்கு தலைமை தாங்கக் கிடைத்ததை யிட்டு நான் பெரு மைப்படுகிறேன்' என்று சபாநாயகரின் அந்தக் குறிப்பு இருந்தது.

1977 பொதுத் தேர் தலில் இலங்கை யில் சிறிமாவோ பண்டார நாயக்கவினுடைய ஆட்சி மாறி, ஜே. ஆர். ஜெய வர்த்தன புதிய ஆட்சியை அமைத் தார். அது போலவே இந்தியாவில் இந்திரா காந்தியினுடைய ஆட்சி மாறி, மொரார்ஜி தேசாய் பிரதமரானார். இந்த ஆட்சி மாற்றத்தில் ஜே. ஆர். ஜெய வர்த்தனவும் மொரார்ஜி தேசாயும் புதிய நண்பர்களானார்கள். இலங்கையில் தமிழர் அரசியல் நடவடிக்கைகளில் இளைஞர்களின் தீவிரவாதமும் தீவிரமா கிக் கொண்டிருந்தது. அரசுக்கு தலை யிடியாகும் இந்த விவகாரத்தைத் தணிக் கும் ஒரு முயற்சியாக, பிரதமர் ஜெய வர்த்தனவின் அழைப்பில் மொரார்ஜி தேசாய் இலங்கை வந்தார். அவ்வேளை யில், அவருடன் பேச அமிர்தலிங்கத்தின் அலுவலகம் பலவாறாக முயன்றும் முடியவில்லை. எனினும், பாராளுமன்றத் தில் மொரார்ஜி தேசாய்க்கான வரவேற் பில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதி யில் அமிர்தலிங்கத்துக்கு ஐந்து நிமி டங்கள் பேசுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

பேச்சு முடிந்த பின்னர், மொரார்ஜி தேசாய் தரப்பிலிருந்து வந்த அழைப்பில், அமிர்தலிங்கம் சில சுற்றுக்கள் மோரார்ஜி தேசாயுடன் பேசினார். டில்லி திரும்புமுன்னர், 'இலங்கையில் தமிழர்களுடைய அரசியல் பிரச்னை, அவர்களுக்கு கௌரவமான விதத்தில் தீர்க்கப்படவேண்டும்' என்று, பத்திரிகை யாளர்களிடம் மொரார்ஜி தேசாய் குறிப் பிட்டார். விமான நிலைய வழியனுப்பு வைபவத்தில், இந்தியா வர அமிர்தலிங் கத்துக்கு ஒரு விசேட அழைப்பையும் மொரார்ஜி தேசாய் விடுத்தார்.

பாராளுமன்ற வரவேற்பில், அமிர்த லிங்கத்தின் அந்த ஐந்து நிமிட மந்திர உரை இது.

இலங்கைத் தமிழர்களுடைய அரசி யல் தீர்வில் இந்தியாவின் முக்கியத்துவத் தையும் தேவையையும் சரியாக அதன் பரிமாணங்களோடு உணர்ந்தவர் அமிர்த லிங்கம். அதில் இந்திய தலைவர்களுடன் அவர் பேணிய உறவு ஒருபுறமிருக்க, இந்தியத் தலைவர்கள் இவரிடம் காண் பித்த மதிப்பும் அபிமானமும் கருத்தில் கொள்ளவேண்டியது. அதிலும், இந்திரா காந்தி ஓர் அரசியல் கனவானாகவே அவரை மதித்தார். அந்த மதிப்பில் அமிர்தலிங்கத்துக்கு இந்தியாவிலும் உலக நாடுகளிலும் அவசியமான ஆதரவுக்கு இந்திரா காந்தி பெரிதும் அநுசரணையாகவிருந்தார்.

இந்தியாவுடன் - இந்திராவுடன் பேணிய - ஏற்படுத்திய நம்பிக்கையு டனான நட்பில் அமிர்தலிங்கம் ஈட்டிய சொத்து ஒன்றுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தம். இதனை இலங்கைத் தமிழ் மக்களுக்கான முழுமையான அரசியல் தீர்வாக எவருமே கொள்ளவில்லை - சொல்லவில்லை. ஆனால் அதே வேளை, இது மிக எளிதாக ஏற்பட்டு விட்ட ஒன்றும் அல்ல. தெற்கு ஆசியா வின் கிழநரியான ஜே. ஆர்., 'இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பின்னர், நான் தொடர்ந்து பதவியிலி ருக்க எனக்கு பாதுகாப்பாக இருப்பீர் களா?' என்று இந்தியாவைக் கேட்டுத் தான் ஒப்பமிட்டார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினம் அமிர்தலிங்கத்திடம் லண்டனிலி ருந்து தொலைபேசியில் இந்திய அமை திப்படை பற்றி கேட்டபோது, 'எந்த ஒரு நாட்டின் இராணுவமும் எக்காரணத் துக்காகவும் இன்னொரு நாட்டுக்குள் செல்வது பெரிதும் வரவேற்புக்குரிய தல்ல. ஆனால், எங்களுடைய நிலைமை யில் இந்திய இராணுவம் உடனடி யாக வராவிட்டால், இங்கு பெரும் 'மசக்கர்' நடந்துவிடும்' என்று சொன் னார்.

அமிர்தலிங்கத்துக்கும் இந்தியாவுக் குமிடையில் சில இரகசிய முன்னெடுப்பு கள் நடைபெறுவதாகத்தான் அமிர்தலிங் கம் கொலை செய்யப்பட்டார். அப்படி யொரு முன்னெடுப்பு நிகழ்ந்திருந்தால், அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை விட கூடுதலானதாக இருந்திருக்குமா அல்லது குறைந்ததாக இருந்திருக்குமா?

எப்படியிருந்தாலும், அது இப்போது முடிந்த கதை. அமிர்தலிங்கத்தின் வாழ் வும் அந்தக் கதையோடு முடிந்தது. ஆனால், அமிர்தலிங்கம் ஈழத் தமிழர் களின் அரசியல் சொத்து. அது, மறைக் கப்பட்ட ஒரு சொத்தாக இருப்பதுதான் நம்முடைய இனத்தின் அவலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.08.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 08

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## என்ன செய்யப் போகின்றோம்?

தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டிருக்கின்றார். அவரை நோக்கித் தமிழ் மக்களின் வாக்குகளை திரட்டுவது எவ்வாறு என்பதுதான் அடிப்படையான கேள்வி. இந்தக் கேள்விக்கான பதிலை எவ்வாறு கண்டடைவது என்பதுதான் அடிப்படையான கேள்வியாகும். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இப்போதும் வழமையான தளம்பல் போக்கையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது. மூன்று பிரதான வேட்பாளர்களில் ஒருவரைத்தான் நாங்கள் ஆதரிக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்றும் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்பதுதான் ஒரேயொரு தமிழ்த் தேசிய நிலைப்பாடாகும். ஆனால், இந்த நிலைப்பாட்டைத் தோற்கடிக்க வேண்டுமென்று தென்னிலங்கை வேட்பாளர்கள் சிந்திப்பதோ தலையீடுகளை செய்வதோ - ஆச்சரியமான விடயமல்ல. ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்குள் இருப்பவர்களே அதனை எதிர்ப்பது தான் மிகவும் சிக்கலான பிரச்னையாகும்.

குறிப்பாக, தமிழ் அரசுக் கட்சி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியவை தொடர்ந்தும் தமிழ்ப் பொது வேட்பாளரை தோற்கடிக்க முயற்சித்து வருவது வெள்ளிடைமலை. ஒப்பீட்டடிப்படையில், இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஒரு பகுதியினர் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்து வருகின்றனர். ஆனால், அவர்களால் ஒரு தீர்க்கமான முடிவை இதுவரையில் எடுக்க முடியவில்லை - ஒருவேளை தமிழ் அரசு கட்சிக்குள் செல்வாக்குச் செலுத்தும் ஒரு தரப்பினர் இறுதி நேரத்தில், தென்னிலங்கை வேட்பாளர் ஒருவரை ஆதரிக்கும் முடிவை எடுத்தால் பொது வேட்பாளரை ஆதரிப்போர் எவ்வாறான முடிவை எடுப்பர்? கட்சியிலிருந்து வெளியேறும் முடிவை எடுப்பார்களா?

ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தி, அவரை நோக்கி தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று சொல்வதில் என்ன பிரச்னை உண்டு? ஏன் அதனை எதிர்க்க வேண்டும். கடந்த பல தசாப்தங்களாக தென்னிலங்கை வேட்பாளர் ஒவருக்குத்தானே தமிழ் மக்கள் வாக்களித்து வந்திருக்கின்றனர். இந்த ஒருமுறை தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதில் அப்படி என்ன நிகழ்ந்துவிடப் போகின்றது?

இது தொடர்பில் அனைத்துத் தமிழ்த் தேசிய தரப்புகளும் ஆழமாக சிந்திக்க வேண்டும். ஒருவேளை, கட்சிகளின் தலைமைகள் தடுமாறினாலும் தடம்புரண்டாலும் கட்சிகளின் தொண்டர்கள் இந்த விடயத்தில் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். அது அவர்களின் வரலாற்றுக் கடமையாகும். ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நாங்கள் தோற்கடித்துவிடுவோம் என்று சபதம் எடுப்பதில் என்ன பெருமை உண்டு? இதனால், எதனை சாதிக்க முடியும். மீண்டுமொரு முறை ஏமாற்றப்பட்டோம் - அல்லது, ஏமாறினோம் என்னும் பதிலைத் தவிர, வேறு என்ன நிகழந்துவிடப் போகின்றது?



## நல்லூரான் திருவடி - 16
## ரயில் வண்டியில் பயணித்த தூய ஜோதி!

**சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்**
(ஹவாய் ஆச்சிரமம்)

இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் புகழ் பூத்த சமயப் பிரசாரகராக சங்கர சுப்பையர் என்ற சமய அறிஞர் இருந்தார். தமிழகத்திலும் இலங்கையிலும் விரிவான பயணங்களை மேற்கொண்டு கதாப்பிரசங்கங்களை அவர் செய்துவந்தார். இவரின் கதாப்பிரசங்கங்கள் மிகப்பிரபலமானவை.

ஒரு தடவை கொழும்பு வந்திருந்த இந்த சமய அறிஞரை யாழ்ப்பாணத்துக்கும் அழைத்து அவரது கதாபிரசங்கங்களை கேட்க யாழ்ப்பாணத்தவர்கள் விரும்பினர். அவரும் அந்த அழைப்பை ஏற்றுத் தனது அபிமானிகள் சிலரோடு ரயில் வண்டியில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணமானார். அச்சமயம், மாங்குளத்தில் சங்கர சுப்பையர் தம்மோடு பயணித்துக் கொண்டிருந்த ஏனையோரைப்பார்த்து, " ஒரு ஜோதி தெரிகின்றது. அந்த ஜோதி இந்த இடத்தில் இப் புகைவண்டியிலேயே ஏறிவிட்டது. எம்மோடு அந்த ஜோதி தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கின்றது" எனக்கூறினார். நாவற்குழி புகையிரத நிலையம் வந்ததும், "அந்த ஜோதி இங்கே இறங்குகின்றது" எனக்கூறி தாமும் அங்கே இறங்கினாராம்.

அப்போது அந்த ரயில் நிலையத்தில் இறங்கிய ஜோதிமயமான யோக சுவாமிகளை ரயில் வண்டியிலிருந்த ஏனைய பயணிகளும் கண்டனர். அதேவேளை, சங்கர சுப்பையரை யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் வரவேற்கப் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். இந்நிலையில் சங்கர சுப்பையரை கூட்டிவந்தோர் யாழ். ரயில் நிலையத்தில் அவருக்காக காத்திருக்கும் வரவேற்பைக் கூறி அவரை மீளவும் ரயில் வண்டியில் ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்தனர். அச்சமயம் அவர் தாம் யாழ்ப்பாணம் வந்து அந்த அற்புத ஜோதியை தரிசிக்க வேண்டும் என்று உறுதிபடக் கூறியிருந்தார்.

சங்கர சுப்பையர் யாழ்ப்பாணம் வந்ததும் யோகர் சுவாமியின் ஆச்சிமத்துக்கு அவரை அழைத்து வந்தோர் கூட்டிச்சென்றனர். அங்கே யோகரைக் கண்டதும் சாஷ்டாங்கமாக தரையில் விழுந்து அவரை சங்கர சுப்பையர் வணங்கினார். அதன் பின்னர் சங்கர சுப்பையர், "இந்தியாவில் பல திருத்தலங்களுக்கும் பயணம்செய்து பல சாதுக்களைக் கண்டதாகவும் ஆனால், யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளைப் போல ஒருவரைக் காணவில்லை" என்றும் கூறினார்.

அப்போது சங்கர சுப்பையரிடம் யோகர், "போதும்போதும் இனி விடு. சமுத்திரங்களை எல்லாம் தாண்டிவிட்டாய். இனி சிற்றாறுகளே உள்ளன. அவற்றைத் தாண்டுவது உனக்கு சிரமமாகுமா?" என்று கூறி ஆசீர்வதித்தார்.

ஒரு தடவை யோகர் சுவாமிகள் தமது கொழும்புத்துறை ஆச்சிரமத்தை கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்தார். அச்சமயம் சில வெளிநாட்டுக்கார்கள் அவரைப் பார்க்க வந்திருந்தனர். யோகர் அவர்களைக் கண்டதும் தனது பணியை இடையில் நிறுத்திவிட்டு, தனது படலையைத் திறந்து அவர்களிடம் தான் ஒரு கூலித் துப்பரவாளர் என்று கூறினார். இதன் அர்த்தம் என்னவெனில், மானிட மனங்களில் காணப்படுகின்ற அசுத்தமான எண்ணங்களை தாம் அகற்றுகின்ற பணியைப் புரிகிறேன் என்பதாகவே விளங்கியிருந்தது.

யோகரின் குருநாதரான செல்லப்பா சுவாமிகள் நோயுற்றிருந்த காலத்தில் அவரைப் பார்வையிட யோகர் சென்றிருந்தார். ஆனால், செல்லப்பரோ யோகரைப் பார்த்து, "இங்கு நீ ஏன் வரவேண்டும்? இங்கு பார்ப்பதற்கு என்ன இருக்கின்றது" என்று கூறினாராம்.

சாதுக்களுடைய சம்பாஷணைகள் எப்போதுமே சாதாரண மக்களுடைய எதிர்பார்ப்புகள் மற்றும் எண்ணங்களுக்கு மிக அப்பாற்பட்டவையாக இருப்பதையே யோகரதும் அவரது ஆசானாகிய செல்லப்பரதும் வாழ்க்கை எமக்கு எடுத்தியம்புகின்றது.

**தொகுப்பு: அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 24 சனிக்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 08
நல்ல நேரம் : 03.05 - 04.35
ராகு காலம் : 09.05 - 10.35
திதி : பஞ்சமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வாகனத்தை இயக்கும் போது அலைப்பேசியில் பேச வேண்டாம். அரசாங்க விஷயம் தாமதமாகும். உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பிரபலங்களால் ஆதாயம் உண்டு. சிறப்பு மிகுந்த நாள்.

**மிதுனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். பழைய உறவினர்கள், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். சாதிக்கும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனகசப்புகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வாழ்வில் ஒரு தெளிவு பிறக்கும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். உற்சாகமான நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அவசர முடிவுகள் எடுக்காமல் இருப்பது நல்லது. சிலருக்கு நீங்கள் நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடியும். முன் கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**கன்னி**
உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். உறவினர், நண்பர்களால் ஆதாயமுண்டு. அரசாங்க விஷயம் சாதகமாக முடியும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். மோகமான நாள்.

**விருச்சிகம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். நட்பு வட்டம் விரியும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். வரவேண்டிய பணம் கைக்கு வரும். வாகன பழுது நீங்கும். உறவினர்கள் மதிப்பார்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். உங்களைப் பற்றி அவதூறாகப் பேசுவார்கள் அதை பெரிதுபடுத்த வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

# அமைச்சரவையில் மாற்றம்? தமிழக முதல்வர் மறுப்பு!

சென்னை, ஓக. 24

தமிழக அமைச்சரவையில் மாற்றம் என பரபரப்பாக தகவல் வெளியான நிலையில், 'எனக்கு தகவல் வரவில்லை' என்று முதல்வர் ஸ்டாலின் மறுப்பு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எப்போது வேண்டுமானாலும் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படலாம் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.



இது தொடர்பில், தி. மு. க. சார் ஊடகங்களும் கருத்துகளை வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில், நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற முதல்வரிடம் செய்தியாளர்கள், "தமிழக அமைச்சரவை மாற்றம் இருப்பதாக தகவல் வருகிறதே?" என்று கேட்டனர்.

இதற்கு முதல்வர், "எனக்கு வரவில்லை" என்று ஒரே வரியில் பதில் அளித்து பரபரப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

# தி. மு. கவை தமிழ்நாட்டில் பா. ஜ. க. நிச்சயம் ஒழிக்கும்!

## அண்ணாமலை தெரிவிப்பு

மதுரை, ஓக. 24

"தமிழகத்தில் தி. மு. க. எப்போது ஒழிகிறதோ, அப்போது தான் மக்கள் உண்மையான ஜனநாயகம், மறுமலர்ச்சியை பார்ப்பார்கள். அதை பா. ஜ. க. நிச்சயம் செய்யும்" என்று கூறியுள்ளார் பாரதிய ஜனதா கட்சியின் (பா. ஜ. க) தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை.

மதுரையில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "தமிழகத்தில் திராவிட கட்சிகளை ஒழிக்க பாராளுமன்ற தேர்தலில் பிள்ளையார் சுழி போட்டுள்ளோம். தமிழகம் திராவிடத்தின் பிடியிலிருந்து வெளியே வந்துவிட்டதை பாராளுமன்ற தேர்தல் முடிவு தெளிவுபடுத்தியுள்ளது.

திராவிட கட்சிகளை எதிர்த்து அரசியல் செய்கிறோம். ஒவ்வொரு முறை ஆட்சிக்கு வரும் போதும் ரூ.15 ஆயிரம் முதல் ரூ. 20 ஆயிரம் கோடி வரை கொள்ளையடிக்கிறார்கள். திராவிட கட்சிகளிடம் உள்ள பணம் வங்கக்கடலில் உள்ள தண்ணீரை விட அதிகம். இதை எதிர்த்து 2024இல் மார்தட்டி நின்றோம் வெற்றிபெற்றோம்.



மோடிக்கு பின்னால் நாங்கள் திரண்டிருப்பது தி. மு. கவை ஒழிக்க வேண்டும் என்பதற்காகவே, அந்த ஒற்றை காரணத்துக்காகவே எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு தமிழகத்தில் இருக்கிறோம். தி. மு. க. எனும் தீயசக்திக்கு தமிழகத்தில் இடமில்லை. தி. மு. க. என்று ஒழிக்கப்படுமோ அன்று தான் தமிழகத்தில் உண்மையான ஜனநாயகம், மறுமலர்ச்சியை மக்கள் பார்ப்பார்கள். அதை பா. ஜ. க. நிச்சயமாக செய்யும் - என்றார். (ஐ)

# கலைஞர் கருணாநிதியின் நூல்கள் நாட்டுடைமை!

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஓக. 24

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூல்கள் அனைத்தும் நூலுரிமைத் தொகை ஏதுமின்றி நாட்டுடைமை ஆக்கப்படும் என்று முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், "

75 திரைப்படங்களுக்கு கதை, திரைக்கதை வசனங்களையும், 15 புதினங்களையும், 20 நாடகங்களையும், 15 சிறுகதைகளையும், 210 கவிதைகளையும் கருணாநிதி படைத்துள்ளார்.

தனியொரு மனிதராக இத்தனை இலக்கிய படைப்புகளை வழங்க இயலுமா என எண்ணும் வண்ணம் கலைஞர் சாதனை படைத்துள்ளார்.

கலைஞரின் இந்த நூல்கள் அனைத்தும் நூலுரிமை தொகை ஏதுமின்றி நாட்டுடைமை ஆக்கப்படும். தமிழ்நாட்டில் மட்டும் இன்றி உலகமெங்கும் வாழும் தமிழர்கள் கருணாநிதியின் நூல்களை படிக்க வாய்ப்பாக அமையும்" என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# முருகன் மாநாடு இன்று ஆரம்பம்!

சென்னை, ஓக. 24

தமிழக இந்து சமய அறநிலையத்துறை சார்பில் "அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு" பழனியில் உள்ள பழனியாண்டவர் கலை - பண்பாட்டு கல்லூரியில் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

மாநாட்டை அமைச்சர் இ. பெரியசாமி தலைமை தாங்கி தொடக்கி வைக்கிறார். மாநாட்டில் "தமிழ்க்கடவுள்" முருகனின் வழிபாட்டு சிறப்பு, இலக்கிய சிறப்பு குறித்த கருத்தரங்குகள், முருகனின் புகழ் குறித்த ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பித்தல், மாநாட்டு மலர் - விழா மலர் வெளியிடுதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

அத்துடன், முருகனின் புகழ் தொண்டு ஆற்றியவர்களுக்கு விருதுகள் வழங்கியும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த மாநாட்டில் இலங்கை, மலேசியா, சிங்கப்பூரிலிருந்தும் இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் இருந்தும் முருக பக்தர்கள் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாநாட்டின் பாதுகாப்பில் 2 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# காவிரி தண்ணீர் பிரச்னை நிரந்தர தீர்வு விரைவில் வரும்!

திருச்சி, ஓக. 24

காவிரி பிரச்னைக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு ஏற்படும் என்று முன்னாள் பிரதமரான எச். டி. தேவகவுடா தெரிவித்துள்ளார்.

சிறீ ரங்கம் கோயிலுக்கு வந்து தரிசனம் செய்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காவிரியில் தமிழ்நாட்டுக்கு [illegible] எனக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து தமிழக ஆட்சியாளர்களுக்கு முழு விவரங்கள் தெரியும்.

கர்நாடக மாநிலத்தில் பெங்களூர் உள்ளிட்ட 9 மாவட்டங்கள் குடிநீருக்காகக் கஷ்டப்படுகின்றன. இந்த பிரச்னையில் பெங்களூரில் மட்டும் ஒரு கோடியே 40 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது அனைவரும் அறிந்ததே. இதற்கு மேல் நான் கருத்துக் கூற விரும்பவில்லை. இருப்பினும் காவிரிப் பிரச்னையில் இரு மாநிலங்களுக்கும் ஒருமித்த கருத்து ஏற்படும் நாள் விரைவில் வரும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# நிறைவேற்று அதிகாரத்தை ரணில் தான்தோன்றித்தனமாக பாவித்தார்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 24

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேர்தலைப் பிற்போட்டு நாட்டு மக்களின் அடிப்படை உரிமையை மீறியுள்ளார் என உயர்நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

அரசியல் யாப்பு விதிமுறைகளை மீறி, நிறைவேற்று அதிகாரத்தை ரணில் தான்தோன்றித்தனமாக பயன்படுத்தியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் ஒன்பதாவது மக்கள் வெற்றிப் பேரணி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் மொறட்டுவை சொய்சாபுர விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கருத்து வெளியிட்ட சஜித் பிரேமதாஸ,

ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் அவர்களின் சுய இலாபத்திற்காக வங்குரோத்து அடைந்த நாட்டிலிருந்து, தேசிய வளங்களையும் சொத்துகளையும் முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றனர்.

நான் என்கின்ற மமதையுடன் ஆட்சி யுகம் ஒன்றை ஏற்படுத்தி தனது அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக அதிகபட்ச தந்திரங்களை ரணில் பயன்படுத்தியுள்ளார்.

அரசியல் யாப்பு விதிமுறைகளை மீறி, நிறைவேற்று அதிகாரத்தை தான்தோன்றித்தனமாக பயன்படுத்தியுள்ளார்.

எனவே, இந்த இருண்ட யுகத்தை தோல்வி அடையச் செய்து, பொது மக்களுக்கான புதிய யுகத்தை நோக்கி செல்வதற்கு ஒன்றிணையுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

தற்போது இந்த அரசியலில் தலைகள் இடம் மாறிக் கொண்டிருக்கின்றன. பணத்துக்காகவும் தரகுத் தொகைகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் சிறப்புரிமைகளுக்காகவும் மதுபான சாலைகளுக்கான உரிமத்திற்காகவும் தமது சுய கௌரவத்தை இழக்கின்ற ஓர் அரசியல் கலாசாரம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

நான் எடுத்த தீர்மானம் சரியானது என்று இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர் உட்பட ஐவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் வழங்கிய தீர்ப்பு எதை குறிக்கின்றது. இந்த தன்னிச்சையான தான்தோன்றித்தனமான தீர்மானத்துக்கு ஜனாதிபதியே பொறுப்புக் கூறவேண்டும். நிதி அமைச்சராக அவர் மக்களின் அடிப்படை உரிமையை மீறி இருப்பதாக நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது- என்றார். (அ)

# நிலக்கண்ணிவெடிகள் அகற்றலுக்கு நிதி பங்களிப்பை நீடித்தது ஜப்பான்

கொழும்பு, ஓக. 24

வடக்கு மாகாணத்தில் நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் வேலைத்திட்டங்களுக்கான தமது நிதிப் பங்களிப்பை ஜப்பான் அரசாங்கம் மேலும் நீடித்துள்ளது.

சுமார் 300 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு வேலைத்திட்டங்களுக்கான ஒப்பந்தம் கொழும்பில் ஜப்பானின் இலங்கைக்கான தூதுவர் மிசுகோசி இடியேக்கி மற்றும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் இரண்டு நிறுவனங்களின் பிரதானிகளுக்கு இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தினூடாக வடக்கில் சுமார் 6,000 குடும்பங்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2002ஆம் ஆண்டு முதல் இலங்கையில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளுக்காக பெரும் பங்காற்றி வருகின்ற ஜப்பானிய அரசாங்கம் இதுவரை 46 மில்லியன் டொலர்களை அதற்கான நிதியுதவியாக வழங்கியுள்ளது. (அ)

# பெந்தர ஆற்றில் படகு விபத்து; இரண்டு பேரை காணவில்லை!

கொழும்பு, ஓக. 24

பெந்தர ஆற்றில் 2 சுற்றுலா படகுகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காணாமல் போயுள்ளனர்.

நேற்று முன் தினம் பிற்பகல் அளுத்கமவில் உள்ள சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் பணி முடிந்து ஆட்களை ஏற்றிச் சென்ற படகும் பெந்தர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுற்றுலா படகுமே இவ்வாறு விபத்துக் குள்ளாகின. இதில், பெந்தர சுற்றுலா விடுதியொன்றில் இருந்த இருவர் விபத்தில் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கி மனைவி பலி!

## கணவன் உயிர்மாய்ப்பு

கொழும்பு, ஓக. 24

கணவன் ஒருவர் தனது மனைவியையும் மகனையும் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் படுகாயமடைந்த மனைவி உயிரிழந்தார்.

குடும்பத் தகராறு காரணமாக இந்த கொலை நடந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிவித்திகல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கலவான வீதி, தெல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கணவன், மனைவி, 18 வயதுடைய மகன் மற்றும் 08 வயதுடைய மகள் ஆகியோர் வசித்து வந்தனர். குடும்பத் தகராறு காரணமாக நேற்று முன் தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த மனைவி மற்றும் மகன் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மனைவி உயிரிழந்தார் என்று பொலிஸார் கூறினர்.

பின்னர், பொலிஸார் வீட்டைச் சோதனையிட்ட போது, சந்தேக நபரான 48 வயதுடைய கணவர் வீட்டில் உயிர்மாய்த்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். (அ)

# அரச ஊழியர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு கொடுப்பனவு ரூ. 10,000 வழங்கவேண்டாம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஓக. 24

அரச ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த கடந்த ஜூலை 08, 09 ஆகிய இரு தினங்களில் கடமைக்கு சமுகமளித்திருந்த நிறைவேற்றுத்தர சேவைக்கு உட்படாத அரச ஊழியர்களுக்காக இம் மாதம் சம்பளத்துடன் செலுத்தப்படவிருந்த பத்தாயிரம் ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்கக் கூடாது என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் வாக்குப்பதிவு அறிவிக்கப்பட்டுள்ள இந்த காலப்பகுதியில், இதுபோன்ற மேலதிக ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குவது ஒரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளரை ஊக்குவிப்பதாக இருக்கலாம் என்பதனால் இந்த கொடுப்பனவை தேர்தலுக்குப் பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடிதம் மூலம் அமைச்சின் செலாளருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

# இலங்கையில் தொடர்ந்தும் வறுமை நிலை அதிகரிப்பு!

## எரான் விக்ரமரத்ன கவலை



கொழும்பு, ஓக. 24

பொருளாதார சீர்திருத்தங்களுக்கு மத்தியில் அதிகரித்து வரும் வறுமை நிலைகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன கவலை வெளியிட்டார்.

தற்போதைய சமூக - பொருளாதார சூழல் குறித்து கருத்து தெரிவித்த அவர், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க உயர்வடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதன்படி, இந்த எண்ணிக்கை சுமார் 3 மில்லியனிலிருந்து சுமார் 7 மில்லியனாக உயர்வடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியம் நிர்ணயித்த பல இலக்குகளை அரசாங்கம் அடைந்துள்ள நிலையில், மக்கள் மீதான கடுமையான பாதிப்பை அவர் எடுத்துரைத்தார்.

இவ்வாறான பொருளாதார நிலைமைகளால் தனிநபர்கள் பலர் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# சிலர் தனிப்பட்ட காரணங்களுக்காகவே பொது வேட்பாளரை எதிர்க்கின்றார்கள்!

## சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறுகிறார்

கிளிநொச்சி, ஓக. 24

சுமந்திரன், சாணக்கியன், சிவஞானம் போன்ற சிலர் தனிப்பட்ட காரணங்களுக்காகவே தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் பொது வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரத்தை ஆரம்பித்து வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிக்கையில்-

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தமிழரசுக் கட்சியில் மிகப் பெரும்பாலானவர்கள் ஆதரவாக இருக்கின்றார்கள்.

சுமந்திரன், சாணக்கியன், சிவஞானம் போன்ற ஒரு சிலரைத் தவிர கட்சியின் ஏனைய மேல் மட்டங்களும் சரி, ஏனைய கட்சியின் கீழ் மட்ட தொண்டர்களும் சரி பொது வேட்பாளர் வெற்றி பெறவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

கிளிநொச்சியைச் சேர்ந்த சிறிதரனும் பொது வேட்பாளரை வாழ்த்தியிருக்கிறார். ஏற்கனவே அதற்கான கூட்டங்களும் கிளிநொச்சியில் கூட்டப்பட்டிருக்கின்றன.

அதேபோல தலைவராக இருக்கின்ற சேனாதிராசாவும் இதனை வரவேற்றிருக்கின்றார். ஆகவே தமிழ் அரசுக் கட்சியினுடைய பெரும்பான்மையானோர் இதனை ஆதரித்து வரவேற்றிருக்கிறார்கள்.

ஒரு சிலர் தங்களுடைய சொந்தக் காரணங்களுக்காக இவ்வாறு எதிர்க்கின்றனர்.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக முடிவு எடுப்பார்களாக இருந்தால் அது தமிழ்த் தேசியத்துக்கு எதிரான முடிவாகத்தான் இருக்கும்.

தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் வகையில் தமிழ் தேசியக் கட்சிகளும், சிவில் அமைப்புகளுமாக ஒன்றாக இணைந்து பொது வேட்பாளரை நிறுத்தியிருக்கின்றன.

தமிழ் மக்களுடைய பிரச்னைகளை தீர்க்காமல் நாட்டின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்க முடியாது என்பதை விளக்கும் வகையிலும் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வாக்களிப்பதன் ஊடாகவுமே தென்னிலங்கையின் வேட்பாளர்களுக்குத் தெளிவுபடுத்த முடியும்.

எங்களுக்கு இருக்கக்கூடிய ஜனநாயகத் தளம் என்பது இந்த ஜனாதிபதி தேர்தலே யாகும். அந்த களத்தை பாவித்து ஒட்டுமொத்த வடக்கு- கிழக்கு தமிழர்களும் இணைந்து இந்த செய்தியை சொல்ல விரும்புகின்றோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்துறையின் மூலமே பொருளாதாரம் வலுப்பெறும்!

## சுட்டிக்காட்டுகிறார் அநுரகுமார



கொழும்பு, ஒக. 24

**நாட்டில் விவசாயத்துறையை ஊக்குவிப்பதன் மூலமே பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கடுகன்னாவ பகுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடளாவிய ரீதியாகவுள்ள மக்களை அழைத்து ரணில் விக்கிரமசிங்க அநுராதபுரத்தில் கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தார்.

அன்றைய தினத்திலிருந்து இதுவரை எந்த கூட்டங்களும் நடத்தப்படுவதில்லை.

பொதுமக்களின் நிதியைக் கொண்டு முழு அளவிலான தேர்தல் பிரசார பணிகளை ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ளார்.

வாகனம், எரிபொருள், வீடு, மின்கட்டணம், நீர்க் கட்டணம் என்பனவற்றுக்கு அரசாங்கத்தின் நிதியே பயன்படுத்தப்படுகிறது. மனுச நாணயக்கார மற்றும் ஹரீன் பெர்னாண்டோ ஆகியோர் அண்மையில் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர்.

பதவி நீக்கப்பட்ட இரண்டு நாட்களில் ஜனாதிபதியினால் குறித்த இருவருக்கும் ஆலோசகர் பதவிகள் வழங்கப்பட்டன.

நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால் விவசாயத் துறை மேம்பட வேண்டும்.

கட்டங்கட்டமாக நாட்டின் விவசாயத்துறையை முன்னேற்ற மடையச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

# வெற்றி பெற்று பதவிக்கு வந்ததும் வேலையில்லாப் பிரச்னைக்கு தீர்வு

## உறுதியளிக்கிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஒக. 24

தான் தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்கு வந்ததும் இந்த நாட்டின் வேலையில்லாப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன், தொழில் நுட்பத்துறையில் புரட்சியொன்றும் ஏற்படுத்தப்படும் என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இளைஞர்களை விவசாயத் துறையின் விவசாயிகளாக மாற்றி வேலையில்லாப் பிரச்னைக்கு விடிவு காண்பது உறுதி எனவும் அவர் தெரிவித்தார்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கருகில் தம்புள்ளை மாநகர சபையின் முன்னாள் முதல்வர் ஜாலிய ஒபாத்தவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்நிகழ்வில் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலக்க கொட்டேகொடவும் கலந்து கொண்டார். (அ)

# நேற்று முதல் ரயில்களுக்கு ஈ-ரிக்கெற்

கொழும்பு, ஒக. 24

இலத்திரனியல் ரயில் பயணச்சீட்டுகளை (ஈ-ரிக்கெற்) கையடக்கத் தொலைபேசி ஊடாக பெற்றுக்கொள்ளும் நடைமுறை நேற்று முதல் செயற்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

www.prawesha.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக அனைத்து ரயில் பயணங்களுக்குமான பயணச்சீட்டுகளை இந்த முறையின் ஊடாக ஒதுக்கிக்கொள்ள முடியும் என ரயில் போக்குவரத்து அத்தியட்சகர் எம்.ஜே. இதிபொலகே தெரிவித்தார். (அ)

# கூரிய ஆயுதங்களை காட்டி சொத்துக்கள் கொள்ளை!

## சந்தேக நபர் ஒருவர் கைது

கொழும்பு, ஒக. 24

கூரிய ஆயுதங்களை காட்டி அச்சுறுத்தி வாடகைக்கு செல்வதாக கூறி முச்சக்கர வண்டிகள், ஆபரணங்கள் உள்ளிட்ட சொத்துக்களை திருடிய சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அருணோதய மாவத்தையில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இராஜகிரிய ஒபேசேகரபுர பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவராவார்.

குறித்த சந்தேக நபர் பேலியகொடை, களனி, கடவத்தை, பொரளை மற்றும் மிரிஹான ஆகிய பகுதிகளில் முச்சக்கர வண்டிகள், கையடக்கத் தொலைபேசிகள், தங்க ஆபரணங்கள் போன்றவற்றை கொள்ளையடித்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கொள்ளையிடப்பட்ட பொருட்கள் சில தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாட்டில் எம்பொக்ஸ் பரவலைத் தடுக்க சுகாதார அமைச்சு முறையான திட்டம்!

கொழும்பு, ஒக. 24

விமான நிலையங்களினுடாக நாட்டுக்குள் நுழையக்கூடிய (எம்பொக்ஸ்) குரங்கம்மை நோயாளிகளை அடையாளம் காணும் வகையில் நோய்த் தடுப்பு கட்டமைப்பு முறையை சுகாதார அமைச்சு வலுப்படுத்தியுள்ளது.

குரங்கம்மை நோயாளிகள் பதிவாகினால் அவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்கான வசதி கொழும்பில் உள்ள தொற்றுநோய் நிறுவகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பாலித மஹிபால வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் எம்பொக்ஸ் நோயாளிகளை கண்டறிவதற்கு ஆய்வுகூட வசதிகள் உள்ளன. கடந்த 20ஆம் திகதி சுகாதார அமைச்சில் நடைபெற்ற நிபுணர் குழுக் கூட்டத்தில் இந்நோய்க்கான சிறந்த தயார்நிலை மற்றும் பதிலளிப்பு தொடர்பில் தேவையான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை அனைத்து சுகாதார நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆபிரிக்க பிராந்தியத்தில் முக்கியமாக மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க பிராந்தியத்திலுள்ள நாடுகளில் குறிப்பாக கொங்கோவில் இந்நோயின் அதிக தாக்கம் மற்றும் தீவிரத்தன்மை காரணமாக உலக சுகாதார அமைப்பால் ஒகஸ்ட் 14/2024 அன்று ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேச அழைப்பு விடுக்கப்பட்டது.

உலகளவில் தயார்நிலை மற்றும் பொதுச் சுகாதார அவசரநிலையாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஆசிய பிராந்தியத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நாடுகளில் இந்நோய் பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எம்பொக்ஸ் என்பது எம்பொக்ஸ் வைரஸால் ஏற்படுகிறது. மேலும் எம்பொக்ஸ் நோய்த்தொற்றுடைய நபரின் உடல் திரவங்கள், காயங்கள் மற்றும் சுவாசக்குழாய்களில் நீண்டகால வெளிப்பாட்டின் மூலம் பரவுவதால், நோய் பரவும் அபாயம் குறைவு.

பாதிக்கப்பட்ட நபர் பயன்படுத்தும் படுக்கை விரிப்புகள் அல்லது உடைகள் மூலம் நோய் பரவும் வாய்ப்பும் உள்ளது. காய்ச்சல், தோலில் கொப்புளங்கள் மற்றும் நிணநீர் கணுக்கள் வீங்குவது குரங்கம்மை நோயின் முக்கிய அறிகுறிகளாகுமென சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் பாலித மஹிபால மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சிக்கு மைத்திரிபாலவே முழு பொறுப்பு

## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 24

சுதந்திர கட்சியின் வீழ்ச்சிக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்புக் கூறவேண்டுமென, அக்கட்சியின்பொது செயலாளர்தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திர கட்சியின் உறுப்பினர்களான அங்கஜன் ராமநாதன், சாரதி துஸ்மந்த ஆகியோர் ஜனாதிபதி ரணிலுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். இதனால் நாம் கவலையடைகின்றோம். அவர்களின் கட்சி தாவல் சலுகைகளை அடிப்படையாகக் கொண்டது. அவ்வாறானோருக்கு மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

மதுபான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு, முன்பு வரம்பு காணப்பட்டது. அந்த வரம்பு தற்போது மீறப்பட்டுள்ளது. சுதந்திர கட்சிக்கு நேர்ந்துள்ள இக்கட்டான சூழ்நிலைக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்பு கூறவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மக்களை திரட்ட முடியவில்லை. எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவால் மாத்திரமே ஜனநாயக ஆட்சி முறைமையை ஏற்படுத்த முடியும் - என்றார். (அ)

# 2025 முதல் அரச ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் ரூ.55,000

கொழும்பு, ஒக. 24

2025 ஜனவரி முதல் அனைத்து அரச ஊழியர்களினதும் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாக, அரச சேவை சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவர் உதய செனவிரத்ன தெரிவித்தார்.

அதற்கமைய தற்போது அரச ஊழியர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளமான 24,000 ரூபாவை 30,000 ரூபாவாக அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறித்த அதிகரிப்புக்கு திறைசேரியின் இணக்கத்துடன் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தெரிவித்த அவர், தகுதிகள், அனுபவம் மற்றும் தற்போது வகிக்கும் பதவியின் அடிப்படையில் இந்த சம்பள அதிகரிப்பு அமையும் எனவும் இங்கு சுட்டிக் காட்டினார்.

அது மாத்திரமன்றி வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை ரூ.25,000ஆக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக உதய செனவிரத்ன இங்கு குறிப்பிட்டார்.

தற்போதைய பணவீக்கம் மற்றும் பொருளாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு, ஜனவரி 2025 முதல் அனைத்து அரச ஊழியர்களுக்கும் ரூ. 25,000 வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அந்த வகையில் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அதிகரிப்புடன் அரச ஊழியர் ஒருவர் ரூ. 55,000 சம்பளத்தை பெறுவார் என அவர் குறிப்பிட்டார்.

ஜனவரி 2025 முதல் 3 வருடங்களுக்கு இந்த ரூ. 25,000 வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மாற்றமின்றி பேணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஓய்வூதியர்களுக்கு 2025 ஜனவரி முதல் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக தலா ரூ.12,500 வழங்கப்படவுள்ளது.

அத்துடன் 2020ஆம் ஆண்டுக்கு முன் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு இதுவரை செலுத்தப்படாத சம்பள உயர்வை வழங்கி, அவர்களது ஓய்வூதியத்தில் திருத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் அநுரவுக்கு வழங்கப்பட்ட பணம் எங்கே?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, ஓக. 24

**அநுரகுமார திஸநாயக்கவுக்கு வெளிநாடுகளில் பெற்றுக்கொடுக்கப்பட்ட பெருந்தொகைப் பணத்துக்கு என்ன வாயிற்று என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல கேள்வி எழுப்பியுள்ளார்.**



கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கடந்த காலங்களில் பல்வேறு நாடுகளுக்கு விஜயம் செய்தார்.

அங்கு அவருக்கு பெருந்தொகைப் பணம் வழங்கப்பட்டது. அந்தப் பணத்துக்கு என்ன வாயிற்று?

நாட்டிலுள்ள ஏனைய கட்சிகளைவிட, தேசிய மக்கள் சக்தியின் வங்கி கணக்கில் பெருந்தொகை நிதி இருக்கின்றது.

மக்கள் இது குறித்து தெளிவு பெற வேண்டும். அரசியல் வாதிகள் அதிசொகுசு வாகனங்களில் பயணிப்பதாக அநுரகுமார திசாநாயக்க குற்றம் சுமத்துகிறார். ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டதன் பின்னர், அவரும் அதிசொகுசு வாகனத்திலேயே பயணிக்கிறார்.

நாட்டை முன்னேற்றும் செயற்றிட்டம் ஐக்கிய மக்கள் சக்தியிடமே இருக்கிறது. தேர்தல் காலத்தில் கட்சி மாறுபவர்களைப்பற்றி எமக்கு கவலை இல்லை. மக்கள் ஆதரவு சஜித் பிரேமதாசவுக்கே உண்டு - என்றார். (அ)

# ஜனாதிபதி ரணிலின் இயலாமையை காட்டுகின்றது உயர்நீதிமன்ற தீர்ப்பு!

## ஹரிணி அமரசூரிய சாடல்

கொழும்பு, ஓக. 24

மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இயலாமையை வெளிக்காட்டுகிறது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமையால், மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பிரதானமாக பொறுப்பு கூறவேண்டும்.

அரசியலமைப்பின் பிரகாரம் மக்களின் வாக்குரிமைமைக் காப்பாற்ற வேண்டிய கடமை ஜனாதிபதிக்கு உண்டு. தேர்தலை நடத்தாமை ஜனாதிபதியின் இயலாமை வெளிக்காட்டுகின்றது.

அவரால் இன்னும் ஒரு மாதமே ஆட்சியில் இருக்க முடியும். தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், உடனடியாக பொதுத்தேர்தல் நடத்தப்படும். அதன்பின்னர் உள்ளூராட்சி மன்ற தேர்தலும், மாகாணசபை தேர்தலும் மிக விரைவாக நடத்தப்படும் - என்றார்.

# மாணவியை மிகமோசமாக தாக்கிய ஆசிரியர்கள் கைது!

கொழும்பு, ஓக. 24

வென்னப்புவ பகுதியிலுள்ள முன்னணி பாடசாலை ஒன்றின் மாணவி ஒருவரைக் கடுமையாகத் தாக்கிய குற்றச்சாட்டில் இரண்டு ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

10ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டிலேயே குறித்த இருவரும் கைதாகினர்.

குறித்த மாணவியை ஒரு ஆசிரியர் கடுமையாகத் தாக்கியுள்ளார். மற்றைய ஆசிரியர் தும்புத்தடியால் தாக்கியதுடன் வெயிலில் முழந்தாளிடச் செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த மாணவி கடந்த 13 நாட்களாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் காவல் துறையினர் முன்னெடுத்த உரிய விசாரணையின் பிரகாரம் குறித்த ஆசிரியர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இராஜினாமா குறித்து சபாநாயகருக்கு இதுவரையில் அறிவிக்கவில்லை தலதா!

கொழும்பு, ஓக. 24

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள தனது பதவியை இராஜினாமா செய்வதாக பாராளுமன்றத்தில் அறிவித்துள்ள போதிலும், சபாநாயகருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாததன் காரணமாக அடுத்த பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் சிக்கலாகியுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்றத்தின் பொதுச்செயலாளர் குஷானி ரோஹணதீரவிடம் வினவியபோது, தலதா அத்துக்கோரள தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பிக்காததால், அந்த பாராளுமன்ற வெற்றிடத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க முடியவில்லை என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக அத்துக்கோரள பாராளுமன்றத்தில் நீண்ட அறிக்கை ஒன்றை விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தலதா அத்துக்கோரளவின் இராஜினாமாவுடன், கருணாரத்ன பரணவிதான நியமிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 97 வயது பெண் களனி பல்கலையில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றார்

கொழும்பு, ஓக. 24

களனிப் பல்கலைக்கழகத்தின் 143 ஆவது பட்டமளிப்பு விழாவில் 97 வயதான லீலாவதி அசிலின் தர்மரத்ன பாலி மற்றும் பௌத்தத்தில் முதுகலைப்பட்டத்தை பெற்றுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அவர் இந்தப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

லீலாவதி அசிலின் தர்மரத்ன உயர்தரத்தில் சித்தியடைந்து ஆசிரியர் பணியில் சேவையாற்றிய பின்னர் ஓய்வு பெற்றார்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற நொத்தாரிசுகளுக்கான பரீட்சையில் நாடளாவிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற அவர் நொத்தாரிசு பரீட்சையில் சித்தியடைந்த ஒரே பெண்ணாகவும் பதிவாகியுள்ளார். (அ)

# தனியார் வைத்தியசாலையில் பதிவு செய்தோருக்கு முன்னுரிமை

## கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கண் சிகிச்சைக்கு சென்றவர்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,செப்.24

தனியார் வைத்தியசாலையில் பதிவு செய்த நோயாளர்களை விசேடமாக அழைத்துச் சிகிச்சையளிக்கப்படுவதால், தாம் பாதிக்கப்படுவதாக கிராமப்புற மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தனியார் வைத்தியசாலைகளில் பதிவு செய்யப்பட்ட நோயாளர்கள் விசேட வைத்திய நிபுணர்கள் பார்வையிடுவதற்காக வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டு விசேடமாக பார்வையிடும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

நேற்று முன் தினம் கிளிநொச்சி வைத்தியசாலை யில் கண் சிகிச்சைப் பிரிவில் இச்சம்பவம் தொடர்பில் அவதானித்த நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

விசேட வைத்திய நிபுணரிடம் காண்பிப்பதற்காக தனியார் வைத்தியசாலையில் பதிவு செய்த நோயாளர்கள் இவ்வாறு வரிசை நடைமுறையை பின்பற்றாது அழைக்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

சிகிச்சைக்காக தூர இடங்களிலிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சென்ற ஏழைகள், போக்குவரத்து உள்ளிட்ட சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

வெளிநோயாளர் பிரிவில் நீண்ட வரிசையில் நின்ற பின், கண் சிகிச்சை பிரிவிற்கு அனுப்பப்படுகின்றனர். மீண்டும் அங்கு தொடர் இலக்கங்கள் வழங்கப்படுகிறது.

ஆனால், குறித்த வரிசை நடைமுறையை பின்பற்றாது, தனியார் வைத்தியசாலையில் பதிவு செய்தவர்கள் பெயர் குறிப்பிட்டு அழைக்கப்படுகின்றனர்.

அவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு வைத்தியர்கள் பார்வையிடுகின்றனர். சிகிச்சைக்காக சென்ற ஏழை நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதனால், தூர இடங்களிலிருந்து செல்லும் ஏழை நோயாளர்கள் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு தொடர்ச்சியாக முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலை கிளிநொச்சி வைத்தியசாலையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. இதனால் அப்பாவி ஏழைகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்துகின்றனர். (அ)

# 2005 ஆம் ஆண்டு இழைத்த தவறை தமிழர் மீண்டும் செய்யமாட்டார்கள்

## தலதா அத்துக்கோரள

கொழும்பு, ஓக. 24

2005 ஆம் ஆண்டு இழைத்த தவறை வடக்கு, கிழக்கு மக்கள் மீண்டும் இழைக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அன்று ஜனாதிபதி தேர்தலை அம்மக்கள் புறக்கணித்தால்தான் ரணில் தோற்றார்." - என்று முன்னாள் அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

"1950 களில் பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறினார், ஆனால் கட்சி பலவீனமடையவில்லை. 1991 இல் லலித் மற்றும் காமினி திஸநாயக்க ஆகியோர் ஐ.தே.கவை விட்டு வெளியேறி புதிய கட்சியை ஸ்தாபித்தனர். அப்போதும் ஐக்கிய தேசியக் கட்சி பின்னடைவைச் சந்திக்கவில்லை. எனினும், சஜித் பிரேமதாச தலைமையில் நாம் வெளியேறிய பின்னரே கட்சி பிளவை சந்தித்தது. அவ்வாறானதொரு முடிவை எடுத்திருக்ககூடாது என தற்போது தோன்றுகின்றது. பிரதான கட்சியை உடைத்துவிட்டோமே என்ற மனக்கவலை இன்னும் உள்ளது.

2005 இல் ராஜபக்ஷ குழுவின் சூழ்ச்சிக்குள் சிக்கி அப்பாவி வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளை புறக்கணிக்க செய்தனர். இதனால் ரணில் தோற்றார். வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களித்திருந்தால் ரணில் நிச்சயம் ஜனாதிபதி ஆகி இருப்பார். எனவே, ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்ட இரு தடவைகளிலும் அவர் இயல்பாகவே தோல்வியை சந்திக்கவில்லை. அதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

எனினும், 2005 இற்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மக்கள் தமது வாக்குகளை எமது முகாமுக்கே வழங்கிவருகின்றனர். எனினும், தற்போது சஜித்தும், ரணிலும் பிரிந்து நிற்பதால் எவருக்கு வாக்களிப்பது என்ற பிரச்னை உருவாகியுள்ளது. இதன் உண்மைத்தன்மை செப்ரெம்பர் 22 ஆம் திகதி தெரியவரும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டு. நகரில் திடீர் சோதனை:

# 3 உணவகங்களுக்கு 'சீல்' 17இற்கு எதிராக வழக்கு!

மட்டக்களப்பு, ஓக. 24

**மட்டக்களப்பில் சுகாதார மற்ற முறையில் இயங்கிய 3 உணவகங்கள் சீல் வைத்து மூடப்பட்டன. அத்துடன், 17 உணவகங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளன.**

மட்டக்களப்பு நகரில் நேற்றுமுன்தினம் இரவு திடீர் சோதனையை சுகாதார அதிகாரிகள் நடத்தினர். மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் மருத்துவர் இராசரட்ணம் முரளீஸ்வரனின் உத்தரவின்பேரில் இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 32 உணவகங்களில் சோதனை நடத்தப்பட்டன. இதில், 23 உணவகங்களில் பாவனைக்கு உதவாத உணவுகள் கைப்பற்றப்பட்டன. இதைத்தொடர்ந்து 3 உணவகங்கள் சீல் வைத்து மூடப்பட்டன. அத்துடன், 17 உணவகங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டன. (ஐ)

# மாணவர்க்கு ஆபாசப் படம் காட்டிய அதிபர் கைதானார்!

ஏறாவூர், ஓக. 24

தரம் 5 மாணவர்களுக்கு ஆபாசப் படங்களை காண்பித்து வந்த அதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு - ஏறாவூரை சேர்ந்த அதிபரே கடந்த புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டார்.

கைதானவர் ஏறாவூரில் ஆரம்ப பாடசாலை ஒன்றில் அதிபராக உள்ளார். அங்கு, தரம் - 5 மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளும் எடுத்து வந்துள்ளார். அவரின் வகுப்பில் 3 மாணவிகளும் 3 மாணவர்களுமாக 6 பேர் கல்வி கற்கின்றனர்.

இவர்களுக்கே குறித்த அதிபர் தனது கைபேசி மூலமாக ஆபாச படங்களை காட்டி வந்துள்ளார்.

இந்த நிலையில், மேலதிக வகுப்புக்கு மாணவி ஒருவர் செல்ல மறுத்துள்ளார். அவரின் பெற்றோர் அவரிடம் கேட்ட போது விடயத்தை கூறியுள்ளார். இதையடுத்து, மாணவியின் பெற்றோர் 119 அவசர பொலிஸ் பிரிவுக்கு முறையிட்டுள்ளனர்.

இதையடுத்து, 57 வயதான குறித்த அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)




# கிழக்கு மாகாண தமிழ்த்தின போட்டி கல்முனையில் ஆரம்பம்!

காரைதீவு, ஓக. 24

2024 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண மட்ட தமிழ் மொழித்தின விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை கல்முனையில் கோலாகலமாக நடைபெற்றது.

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

ஆரம்பத்தில் தமிழ் பண்பாடு ஊர்வலம் நடைபெற்றது. தொடர்ந்து மாகாண மட்ட போட்டிகள் நடந்தேறின. (ஐ)

# மட்டு. மாவட்ட சிறுவர் சபைக்கான இணையத்தளம் அங்குரார்ப்பணம்

மட்டக்களப்பு, ஓக. 24

மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் சபைக்கான இணையத்தள அங்குரார்ப்பணம், மாவட்ட சிறுவர் சபையின் துளிர் மடல் வெளியீட்டு நிகழ்வு என்பன மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் சபையின் ஏற்பாட்டில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தசுதர்ஷனி சிறிகாந்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் உதவி மாவட்ட செயலாளர் ஜீ. பிரணவனின் ஒழுங்கமைப்பில் ஏ.யு லங்கா நிறுவன நிதி அனுசரணையில் மாவட்ட செயலகத்தில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.



காணிப் பிரிவுக்கான மேலதிக மாவட்ட செயலாளர் காணி நவரூபரஞ்ஜனி முகுந்தன், மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.லக்ஷிக்கா, மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் தி. மதிராஜ், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், ஏ.யு லங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள், மாவட்ட சிறுவர் சபை தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சிறுவர் சபை உறுப்பினர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

'துளிர்' செய்திமடலின் முதல் பிரதி மாவட்ட சிறுவர் சபை பிரதிநிதிகளால் மாவட்ட அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கப்பட்டன. (ஐ)

# மட்டக்களப்பில் வாக்களிக்க நான்கரை இலட்சம் பேர் தகுதி!

மட்டக்களப்பு, ஓக. 24

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 இலட்சத்து 49 ஆயிரத்து 606 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் திருமதி. ஜஸ்டினா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாவட்ட செயலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், மாவட்டத்தின் 3 தேர்தல் தொகுதிகளான் கல்குடா தொகுதியில் இருந்து ஒரு இட்சத்து 34 ஆயிரத்து 104 பேரும் மட்டக்களப்பு தொகுதியில் இருந்து 2 இலட்சத்து 10 ஆயிரத்து 293 பேரும் பட்டிருப்பு தொகுதியில் இருந்து ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 289 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் - என்றார். (ஐ)

# தெரிவான சகல ஜனாதிபதிகளுமே தமிழ் மக்களை ஏமாற்றினார்கள்!

## சிறீநேசன் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஓக. 24

கடந்த காலங்களில் நாட்டில் 8 ஜனாதிபதிகள் தேர்தல்கள் மூலமாக பதவிக்கு வந்தார்கள். இவர்கள் சிங்கள மக்களுக்கான - சிங்கள ஜனாதிபதிகளாகவே நடந்து கொண்டார்கள். தமிழர்களுக்கு மேலதிகமாக பிரச்னைகளை உருவாக்கினார்களேயன்றி இனப் பிரச்னையை தீர்க்கவில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும்,

இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு இலங்கையில் 1978இல் அறிமுகம் செய்யப்பட்டது. அதன் பின்னர் இந்நாட்டில் 8 ஜனாதிபதிகள் தேர்தல்கள் மூலமாக பதவிக்கு வந்தார்கள். இவர்கள் சிங்கள மக்களுக்கான சிங்கள ஜனாதிபதிகளாகவே நடந்துகொண்டார்கள். தமிழர்களுக்கு மேலதிகமாக பிரச்னைகளை உருவாக்கினார்களேயன்றி, இனப் பிரச்னையைத் தீர்க்கவில்லை.

அந்த வகையில், 46 ஆண்டு காலமாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட 8 ஜனாதிபதிகளும் இடைக்காலத்துக்காக பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட இரு ஜனாதிபதிகளும் தமிழர்களை ஏமாற்றியுள்ளனர்.

தற்போது அதிகாரத்திலுள்ள ஜனாதிபதி ரணில் அவர்கள் கல்முனை வடக்குப் பிரதேச செயலகம், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்னைகளைக்கூட தீர்க்கவில்லை. இதற்கான மக்களின் அறவழிப் போராட்டத்தை அவர் மதிக்கவில்லை.

இப்போது கூட அவரால் அந்தப் பிரச்னைகளைத் தீர்க்க முடியும். சட்டவிரோதமாக குடியேறிய அயல் மாவட்ட குடியேறிகளைக்கூட ஜனாதிபதியால் வெளியேற்ற முடியவில்லை. மேலும், இனப்பிரச்னைக்கான நிரந்தர தீர்வுக்கான திட்டம் ரணில், சஜித், அநுர ஆகியோரிடம் இல்லை.

இப்படியிருக்க, அதனை நன்கறிந்த பின்பும் சில்லறையான சலுகைகள் அல்லது எதிர்காலத் தனிப்பட்ட தேவைகள் அல்லது நட்புக்காக தமிழர்கள் எந்த வகையில் வாக்களிக்க முடியும். இவர்கள் ஜனாதிபதியானால் தரக்கூடியது இருவர் அல்லது மூவருக்கான அமைச் சர், இராஜாங்க அமைச்சர் பதவிகள் மட்டுமேதான். அதன் பின்னர் கூட்டுப் பொறுப்பு என்ற கட்டுக்குள் இருந்து கொண்டு தலையாட்டிக் கொண்டு, சிறீலங்கா அரசுக்கா கவும், அந்த அரசாங்கத்துக்கா கவும் செயல்படவே முடியும்.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் இனப் பிரச்னைக்கான தீர்வு பற்றிச் சிந்திக்கவும் முடியாது - செயல்படவும் முடியாது என்றார். (ஐ)

# ஜீவனானந்த ஜி மஹராஜின் உருவச் சிலை இன்று திறப்பு

மட்டக்களப்பு, ஓக. 24

மட்டக்களப்பு சிறீ ராமகிருஷ்ண மிஷன் மடாலயத்தின் முன்னாள் தலைவர் துறவி சிறீமத் சுவாமி ஜீவனானந்த ஜி மஹராஜின் திருவுருவச் சிலை இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு கல்லடி நாவற்குடாவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சுவாமி ஜீவனானந்த ஜீ நூற்றாண்டு விழாச் சபை நாவற்குடா இந்து கலாசார மண்டப முன்னாலுள்ள பிரதான வீதியில் நிறுவிய இந்த சிலையை இராமகிருஷ்ண மிஷன் கொழும்பு மூத்த துறவி முகாமையாளர் சிறீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தா திறந்து வைப்பார்.

இதேநேரம், தஞ்சாவூர் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சிறீமத் சுவாமி விமூர்த்தானந்த ஜீ மகராஜ் இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சிறீ மத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ் மட்டக்களப்பு கல்லடி ஆச்சிரம பொது முகாமையாளர் சிறீமத் சுவாமி நிலமாதவானந்தா ஜீ மகராஜ் உதவி பொது முகாமையாளர் சிறீமத் சுவாமி சுர்ச்சிதானந்த ஜீ மகராஜ் முன்னிலையில் இத்திறப்பு விழா நடைபெறும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலை தரைவழியாக தாக்குவதற்கு ஈரான் திட்டம்?



தெஹ்ரான், ஓக. 24

**இஸ்ரேல்மீது தரைவழி தாக்குதலை நடத்துவதற்கு ஈரான் திட்டமிட்டு வருகிறது என்று அந்த நாட்டின் அரச சார்பு ஊடகமான மெஹர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.**

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே தமது நாட்டில் வைத்துக் கொல்லப்பட்டமைக்கு பழிவாங்கும் விதமாகவே இந்தப் படையெடுப்பு நடைபெறவுள்ளது என்று கூறப்படுகின்றது.

மேலும், ஈரானில் ஹனியே படுகொலை செய்யப்பட்டமைக்கு அளிக்கப்படும் பதிலடிக்கு இரண்டு பலன்கள் கிடைக்க வேண்டியது அவசியம்.

முதலாவது, ஈரானின் இறையாண்மைக்கு எதிராக 'பயங்கரவாத' செயலில் ஈடுபட்ட குற்றத்துக்காக இஸ்ரேலுக்கு தகுந்த தண்டனை கிடைக்க வேண்டும். இரண்டாவது, ஈரானின் தற்காப்புத் திறனை மேம்படுத்தி, எதிர்வரும் காலங்களில் மீண்டும் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் இஸ்ரேல் தடுக்கப்பட வேண்டும்.

இது தவிர, காஸாவில் போர் நிறுத்தம் ஏற்படுவதற்கான வாய்ப்பை ஈரானின் பதில் தாக்குதல் குலைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இதற்கெல்லாம் ஏற்ற வகையில் ஈரானின் பதிலடி இருக்க வேண்டுமென்றால், அது யூத ஆக்கிரமிப்புவாதிகள் ஒருபோதும் எதிர்பாராத விதத்தில் இருக்க வேண்டும். ஒரு வேளை, ஈரானின் ஏவுகணைகளை எதிர்பார்த்து அவர்கள் வானத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் தரைவழியாக வழியாக தாக்கப்படலாம். தரைவழி, வான்வழி என இரட்டைத் தாக்குதலாகவும் அது இருக்கலாம் என்று ஈரான் ஐ. நாவுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரானின் புதிய ஜனதிபதி மசூத் பெஷஸ்கியான் கடந்த மாதம் பதவியேற்றார். இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்த ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே, கடந்த ஜூலை 31ஆம் திகதி இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கமலா ஹாரிஸ் தெரிவு சரியானது

## முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன்



நியூயோர்க், ஓக. 24

ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹாரிஸை தேர்வு செய்தது சரி யான முடிவு தான் என முன்னாள் அமெரிக்க ஜனாதி பதி பில் கிளிண்டன் தெரிவித்தார்.

அமெரிக்காவில், எதிர்வரும் நவம்பர், 5ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

குடியரசு கட்சி சார்பில், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், போட்டியிடுகிறார். ஜனநாயக கட்சி சார்பில் இந்திய வம்சாவளியை சேர்ந்த கமலா ஹாரிஸ் களம் இறங்குகிறார்.

சிகாகோவில் நடந்த, ஜனநாயக கட்சி மாநாட்டில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன், கமலாவுக்கு ஆதரவு தெரிவித்தார்.

அப்போது பேசிய அவர், "எதிரிகளை குறைத்து மதிப்பிடாதீர்கள். ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹாரிஸை தேர்வு செய்தது சரியான முடிவுதான்.

2024ஆம் ஆண்டில் தெளிவான தேர்வு கிடைத்துள்ளது என தோன்றுகிறது. ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் இருக்கும்போது குழப்பத்தை ஏற்படுத்தினார்.

அமெரிக்கர்களின் கனவுகளை நனவாக்க கமலா ஹாரிஸ் தன்னை அர்ப்பணித்தார். எதிரிகளை ஜனநாயகக் கட்சியினர் குறைத்து மதிப்பிட வேண்டாம். கமலா ஹாரிஸூக்கு ஒவ்வொரு அமெரிக்கரும் வாக்களித்தால், மக்களின் கனவுகளை நிறைவேற்ற பணியாற்றுவார்.

எந்த சூழ்நிலையையும் கையாள தயாராக இருக்க வேண்டும். துணை ஜனாதிபதியாக இருக்கும் கமலா ஹாரிஸ் மிகவும் சிறப்பாக செயல்படுவதால் நாம் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறோம் - என்றார். (ஐ)



## 90 அடி உயர அனுமன் சிலை அமெரிக்காவில் திறக்கப்பட்டது

நியூயோர்க், ஓக. 24

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் 90 அடி உயரம் கொண்ட அனுமனின் வெண்கல சிலை சமீபத் தில் திறக்கப்பட்டது.

இந்த பிரம்மாண்ட அனுமன் சிலைக்கு 'ஒற்றுமையின் சிலை' (Statue of Union) என்று பெயரிடப்பட்டுள்ளது. மேலும் இந்தச் சிலை உலகின் மிகவும் உயரமான சிலைகளின் பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது.

உயர்ந்து நிற்கும் இச்சிலையானது அமெரிக்காவின் 3ஆவது உயரமான சிலை என்ற சிறப்பையும் பெற்றுள்ளது. (ஐ)

# கொள்ளையரின் தாக்குதலில் 11 பொலிஸார் பலி

## பாகிஸ்தானில் சம்பவம்

கராச்சி, ஓக. 24

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் கொள்ளையர் குழு நடத்திய தாக்குதலில் 11 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் துப்பாக்கிகள், கைக்குண்டுகள் என்பன பயன்படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

லாகூரில் இருந்து சுமார் 400 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ரஹீம் யார் கான் மாவட்டத்தில் செயல்படும் கொள்ளையர்களைத் தேடி வெறிச்சோடிய பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார்மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் தெற்கில் உள்ள பஞ்சாப் மற்றும் சிந்து மாகாணத்தில் கொள்ளையர்களுக்கு எதிராக படையினர் அடிக்கடி நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

கொள்ளையர்கள் கிராம - வனப்பகுதிகளில் மறைந்திருந்து கடத்தல்கள் மற்றும் வழிப்பறியில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 2ஆவது பெரிய வைரம் கனடா கண்டுபிடித்தது

ஒன்ராறியோ, ஓக. 24

உலகின் இரண்டாது மிகப் பெரிய வைரம் பொட்சுவானாவில் கண்டுபிடிக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

கனடா நிறுவனமான லுகாரா டைமண்ட் நிறுவனத்துக்கு சொந்தமான சுரங்கத்தில் 2,492 கரட் வைரம் கண்டெடுக் கப்பட்டுள்ளது.

கடந்த 1905ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்ட 3,106 கரட் கல்லினன் வைரத்துக்குப் பிறகு இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய வைரம் இதுவா கும். பொட்சுவானாவின் தலைநகரான கபோரோனுக்கு வடக்கே சுமார் 500 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கரோவ் சுரங்கத்தில் இந்த வைரம் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த 2019ஆம் ஆண்டில் கரோவே சுரங்கத்தில் 1,758 கரட் செவெலோ வைரம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரம் பிரெஞ்சு பேஷன் ஹவுஸ் லூயிஸ் உய்ட்டன் வாங்கியது. அதன் விலையை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





# விமான விபத்தில் 9 பேர் உயிரிழப்பு!

பாங்கொக், ஓக. 24

தாய்லாந்தின் தலைநகரிலிருந்து புறப்பட்ட சிறிய உள்நாட்டு பயணிகள் விமானம் விழுந்து நொறுங்கியதில் 9 பேர் உயிரிழந்தனர்.

பாங்கொக்கிலிருந்து புறப்பட்ட சில நிமிடங்களில் விமானம் விபத்தில் சிக்கியது. அதில் பயணித்த 9 பேரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விமான நிலையத்திலிருந்து 40 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சதுப்புநிலப்பகுதியில் விமானம் விழுந்து நொறுங்கியது.

ஒரு மணித்தியால தேடுதல் நடவடிக்கைகளின் பின்னர் தேடுவதற்கு மிகவும் கடினமாக பகுதியில் சிதைவடைந்த உடல்பாகங்கள் மீட்கப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் ஐவர் ஹொங்கொங்கை சேர்ந்த சுற்றுலா பயணிகள் என்று தெரியவந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்பு; எனக்கு கவலை எதுவுமே இல்லை

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 24

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பாகத் தாம் கவலை கொள்ளவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

மஹரகமையில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நான் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி குறித்தே சிந்தித்தேன்.

தேர்தலை நடத்தியிருந்தால் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வந்திருக்க முடியாது.

தற்போது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. மக்கள் தங்களின் நிலைப்பாட்டை அதில் வெளிப்படுத்துவார்கள்.



அடுத்ததாக பொதுத் தேர்தலும் பின்னர் மாகாண சபைகளுக்கான நடைபெறும் என ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

# தலதா அத்துக்கோரள போன்றவர்கள் கட்சியிலிருந்து விலகியமை மகிழ்ச்சி!

## சமிந்த விஜயசிறி பகிரங்கம்

கொழும்பு, ஓக. 24

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியை விட்டு எவர் சென்றாலும் சஜித் பிரேமதாஸ கட்சியில் இருப்பார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்தார்.

தலதா அத்துக்கோரள போன்றவர்கள் கட்சியை விட்டும் பாராளுமன்ற உறுப்புரிமையை விட்டும் நீங்கியமை மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர் கூறினார்.

கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கட்சியை கைவிட மாட்டார் என அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தலதாவினால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சென்று இருக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஆஸி. யுனைற்றெட் பெற்றோலியம் இலங்கையில் அடுத்த மாதம் முதல்

கொழும்பு, ஓக. 24

அவுஸ்திரேலியாவின் யுனைற்றெட் பெற்றோலியம் நிறுவனம் இலங்கையில் எரிபொருள் விநியோகத்தை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கவுள்ளது.

அதன்படி 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக எரிபொருளை விநியோகிக்கவுள்ளது.

யுனைற்றெட் பெற்றோலியம் நிறுவனம் இலங்கையில் எரிபொருள் சந்தையில் நுழையும் நான்காவது வெளிநாட்டு நிறுவனமாகும்.

இதேவேளை, இந்த நாட்டில் எரிபொருள் விநியோகம் செய்ய இந்தியாவின் ஐ. ஓ. சி, சீனாவின் சினோபெக் மற்றும் அமெரிக்காவின் ஷெல் நிறுவனங்கள் அனுமதி பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு ஜனாதிபதித் தேர்தலைப் பாதிக்காது

## தேர்தல்கள் ஆணைக்குழு கருத்து

கொழும்பு, ஓக. 24

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு எந்த வகையிலும் ஜனாதிபதித் தேர்தலைப் பாதிக்காது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு திட்டமிட்ட வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாதுவிட்டமை அடிப்படை உரிமை மீறல் என்றும் அந்தத் தேர்தலைக் கூடிய விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவம் உயர்நீதிமன்றம் தீர்ப்பை அறிவித்திருந்தது.

இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

# தண்ணீர் கட்டணம் குறைப்பு

கொழும்பு, ஓக. 24

வர்த்தமானி மூலம் தண்ணீர் கட்டணத்தைக் குறைப்பதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், கடந்த 21ஆம் திகதி முதல் நீர்க் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, வீட்டு உபயோகத்திற்கான நீர்க் கட்டணம் 7 வீதமும் வைத்தியசாலைகளுக்கான நீர்க் கட்டணம் 4.5 வீதமும், அரச பாடசாலைகள் மற்றும் மத ஸ்தலங்களுக்கான நீர்க் கட்டணம் 6.3 வீதமும் குறைக்கப்பட்டுள்ளன. (அ)

# 2 சு.க. எம்.பிக்கள் ரணில் பக்கம்

கொழும்பு, ஓக. 24

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான சாரதி துஷ்மந்த மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இவர்கள் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி அணியை பிரதிநிதித்துவப் படுத்திய இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களாவர்களாவர். (அ)

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் சதொசவில் குறைப்பு

கொழும்பு, ஓக. 24

10 அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலும் நுகர்வோர் இந்த பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ரின் மீன் ஒன்று 75 ரூபாயால் குறைக்கப்பட்டு 500 ரூபாயாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ செத்தல் மிளகாய் 5 ரூபாய் குறைக்கப்பட்டு 780 ரூபாயாகவும் ஒரு கிலோ பாசிப் பயறு 25 ரூபாய் குறைக்கப்பட்டு 890 ரூபாயாகவும் அறிவிக்கப் பட்டுள்ளன.

ஒரு கிலோ வெங்காயம் 20 ரூபாய் குறைக்கப்பட்டு 470 ரூபாயாகவும் ஒரு கிலோ நெத்தலி 15 ரூபாய் குறைக்கப்பட்டு 925 ரூபாயாகவும் ஒரு கிலோ கடலை 2 ரூபாய் குறைக்கப்பட்டு 439 ரூபாயாகவும், ஒரு கிலோ சம்பா அரிசி 4 ரூபாய் குறைக்கப்பட்டு 226 ரூபாயாகவும், ஒரு கிலோ வெள்ளை சீனி 5 ரூபாய் குறைக்கப்பட்டு 242 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மக்கள் போராட்ட முன்னணி வவுனியாவில் தேர்தல் பிரசாரம்



வவுனியா, ஓக. 24

மக்கள் போராட்ட முன்னணியினர் நேற்று கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான நுவான் போபகேவை ஆதரித்து வவுனியா நகரில் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

மக்கள் போராட்ட அமைப்பினருடன் மார்க்சிஸ லெனினிசக் கட்சியினரும் குறித்த பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸ், காணி அதிகாரம் வழங்க பொருத்தமான காலநேரம் இதுவல்ல!

## கூறுகின்றார் சாகர காரியவசம்

கொழும்பு, ஓக. 24

பொலிஸ், காணி அதிகாரத்தை வழங்கப் பொருத்தமான காலம் இதுவல்ல என பொதுஜன பெரமுனவின் பொது செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார கூட்டத்தின்போது பொலிஸ், காணி அதிகாரத்தை வழங்க முடியாது என ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்த கருத்து தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனை கூறினார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வடக்கிற்கும் தெற்கிற்கும் வெவ்வேறு முகங்களை காண்பிக்கின்றனர். வடக்குக்கு சென்று காணி, பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதாகக் கூறுகின்றனர் பின்னர் தெற்கில் வேறு கருத்தை தெரிவிக்கின்றனர். ஆனால், எம்முடைய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அவ்வாறான கருத்தைத் தெரிவிக்கவில்லை.

அவர் வடக்கு, கிழக்குக்கான [illegible] முழுமையாக முன்னெடுப்பேன் என குறிப்பிட்டிருந்தார். ஆனால் தற்போது பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் தொடர்பில் பேசமுடியாது எனக் கூறியிருந்தார்.

30 வருட யுத்தத்தின் ஊடாக நாட்டை பிளவுபடுத்தும் சிந்தனை தோற்றவிக்கப்பட்ட நாட்டில் அத்தகைய அதிகாரங்களை வழங்குவதற்கு பொருத்தமான காலம் இது அல்ல என்ற நிலைப்பாட்டிலேயே எம்முடைய கட்சி உள்ளது.

நாம் ஒன்றிணைந்து பயணிக்கும் காலம் உதயமாகும் போது இத்தகைய அதிகாரங்களை வழங்க முடியுமான காலம் உருவாகும். அது வரையில் இந்த அதிகாரங்களை வழங்க முடியாது என்ற நிலைப்பாட்டிலேயே எம்முடைய கட்சி உள்ளது.

எமக்கு தமிழ் மக்களின் வாக்குகளிவ் குறைவு ஏற்படும் என்ற அச்சத்தில் பொய்யுரைக்காது அவர் தேசிய தலைவர் என்ற வகையில் உண்மையை கூறியமையையிட்டு கட்சி என்ற வகையில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

தேசிய தேவைப்பாட்டை கருதி செயல்படாத காட்டிக் கொடுக்கும் வகையில் செயல்பட்டவர்களுக்கு மீண்டும் கட்சியில் இடமளிக்க வேண்டாம் என்ற கோரிக்கையை




மக்கள் முன்னாள் ஜனாதிபதியும் எம்முடைய கட்சியின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷவிடம் முன்வைத்துள்ளனர்.

அரசியலில் மக்கள் பிரதிநிதிகள் வெவ்வேறு காரணங்களுக்காக தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். அதுவும் அவர்கள் தம்முடைய சுய இலாப நோக்கில் தீர்மானங்களை எடுக்கின்றனர். ஆனால், நாட்டு மக்கள் அவ்வாறு இல்லை.

நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டே செயல்படுகின்றனர். அந்த வகையில், இதனை நாம் தேசிய தேவைப்பாட்டை கருத்தில் கொள்ளாது செயல்பட்டவர்களுக்கு மக்களின் சிவப்பு சமிஞ்ஞையாகவே நாம் இதனை காண்கின்றோம். நாட்டை நேசிக்கும் மக்கள் எந்த சந்தர்ப்பத்திலும் நாடு தொடர்பிலேயே சிந்தித்து செயல்படுகின்றனர். அதனையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 400வருடங்கள்...

அழிவடைந்த நிலையில் காணப்படும் இந்த ஆலயத்தின் ஏனைய பாகங்கள் அத்திபாரத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆலயம் மீளுருவாக்கப் படவுள்ளது. இந்த ஆலயம் கர்ப்பக்கிரகம், அந்தராளம், முன்மண்டபம், துணைக்கோயில்கள், சுற்றுமதில் மடங்கள், கேணி என்பவற்றை கொண்டிருந்ததாகக் கருதப்படுகின்றது.

இந்த ஆலயத்தை மீளுருவாக்கும் நிதியை தற்போது அமெரிக்காவில் வசிக்கும் சிவயூகநாதனத் பாலயோகஸ்தினி என்பவர் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டிஜிற்றல்...

தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்பவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். முதலில் பொதுத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கு அடுத்தபடியாக மாகாண சபை, பிரதேச சபை மற்றும் நகர சபை தேர்தல்கள் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். (அ)

## தமிழ்...

காங்கேசன்துறை ஆகிய இடங்கள் ஊடாக நகர்ந்தது.

பரப்புரை பயணம் செல்லும் வழிதோறும் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் முக்கிய சந்திகளில் பரப்புரை பேச்சுகளும் நடைபெற்று வருகின்றன. மேலும், இந்தப் பரப்புரை பயணத்தில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு பலரும் வாழ்த்துகளையும் தெரிவித்து வருகின்றனர். அத்துடன், மக்களும் பங்கேற்று வருகின்றனர்.

இந்தப் பரப்புரை பயணம் வடக்கு, கிழக்கு மாகாணம் முழுவதும் பயணித்து பொத்துவிலில் நிறைவுபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக பா. அரியநேத்திரன் போட்டியிடுகிறார். அவர் தனது தேர்தல் பரப்புரையை கடந்த 18ஆம் திகதி தந்தை செல்வாவின் சமாதியில் வணங்கி தொடங்கினார். முள்ளியவளையில் முதல் பொதுக்கூட்டம் நடைபெற்றிருந்தது. இந்த நிலையில் 'நமக்காக நாம்' தேர்தல் பரப்புரை பயணம் நேற்று ஆரம்பமானது.

## முதலிடத்தில்...

புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு வெளியிட்ட தகவலுக்கு அமைய,

மௌபிம ஜனதா கட்சியின் வேட்பாளரான பிரபல வர்த்தகர் திலித் ஜயவீரவின் மாத வருமானம் ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாயாகும். அதிக வருமானம் பெறும் முதல் நபர் இவராவார்.

இரண்டாவது இடத்தில் 13 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மாதாந்த வருமானத்துடன் சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ உள்ளார். சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாமல் ராஜபக்ஷவின் மாத வருமானம் 4 இலட்சத்து 54 ஆயிரத்து 285 ரூபாய் என்று கூறப்பட்டுள்ளது.

இதேபோன்று, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா 3 இலட்சத்து 17 ஆயிரத்து 786 ரூபாயும் போராட்டக் கூட்டணியின் நுவான் போபகே 3 இலட்சம் ரூபாயும் ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ 2 இலட்சத்து 85 ஆயிரத்து 681 ரூபாயும் தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்க 2 இலட்சத்து 56 ஆயிரத்து 802 ரூபாயும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 691 ரூபாயும் மாதாந்த வருமானமாக பெறுகின்றனர் - என்றும் குறிப்பிடப்பட்டது. (ஐ)

# ரணில், சுமந்திரன் சூழ்ச்சியாலேயே மாகாண சபை தேர்தல் பிற்போனது!

## கஜேந்திரன் எம். பி.

கொழும்பு, ஓக. 24

கடந்த காலத்தில் மாகாண சபை தேர்தலை பிற்போட்ட சூழ்ச்சியில் ரணிலும் சுமந்திரனுமே செயல்பட்டார்கள் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான செல்வராசா கஜேந்திரன்.

கட்சிப் பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சுமந்திரன் ஆகிய இருவரும் தமது அதிகாரங்களை நிலைநிறுத்துவதற்காகவே செயல்படுகின்றார்கள்.

ஒன்றையாட்சி கட்டமைப்பின் மூலமே இந்த நாட்டை உயர்த்திவிடுவேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியமை ஓர் ஏமாற்று நடவடிக்கை.

இதேநேரம், போரின் முடிவில் சரணடைந்தவர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுவாக தோன்றியுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டத்துக்கு பூரண ஆதரவை வழங்குகிறோம். இந்தப் போராட்டத்தில் அனைத்து தமிழ் மக்களும் கலந்து கொள்ள வேண்டும் - என்றும் அவர் அழைப்பு விடுத்தார். (ஐ)

# தரம் குறைந்த கள் வழங்கிக் கூட்டங்களுக்கு அழைக்கப்படும் பெருந்தோட்ட பகுதி மக்கள்!

கொழும்பு, ஓக. 24

ஜனாதிபதி வேட்பாளர்களுக்காக நடத்தப்படும் தேர்தல் கூட்டங்களில் பெருந்தோட்ட மக்களைப் பங்கேற்கச் செய்வதற்காகப் போத்தலில் அடைக்கப்பட்ட தரங்குறைந்த கள் விநியோகிக்கப்படுவதாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளை பெருந்தோட்டத்துறைமார் உள்ளிட்ட தோட்ட அதிகாரிகள் முன்வைத்துள்ளனர்.

தரங்குறைந்த கள் போத்தல் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதால் அவர்கள் உரிய வகையில் தொழிலுக்கு செல்வதில்லை என்பதுடன் அவர்களின் வினைத்திறனும் குறைந்துள்ளதாக அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கூட்டங்களில் பங்கேற்பதற்காக தரங்குறைந்த கள் போத்தல் வழங்கப்படுவதானது தேர்தல் சட்டத்தைக் கடுமையாக மீறும் செயல் என ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக தெரிவித்துள்ளார்.

அத்துடன் தரங்குறைந்த கள் இலவசமாக மக்களுக்கு விநியோகிக்கப்படுவதானது புகையிலை மற்றும் மதுசார சட்டத்திற்கமைய தவறாகும். தேர்தல் காலப்பகுதியில் பெருந்தோட்டப் பகுதிகளில் அதிகளவில் இடம்பெறும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட சுகாதார தரப்பினர் தலையீடு செய்யவேண்டும்.

அத்துடன் தரங்குறைந்த கள் விநியோகத்தின் மூலம் தேர்தல் சட்டம் மீறப்படுகின்றமை தொடர்பில் காவல் துறையினர் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக அறிவுறுத்தியுள்ளார். (அ)

## இனப்பிரச்னை...

பொருளாதார பிரச்னை ஏற்பட்டது.

"இந்தப் பொருளாதார பிரச்னைக்கு தீர்வு காண இலங்கை அரசாங்கம் இணைந்த வடக்கு, கிழக்குக்கான தேர்வை வழங்கியிருக்க வேண்டும். அதன் விளைவே நாட்டின் தற்போதைய நிலை.

"போர் இல்லாத இலங்கையில் தற்போது பாதுகாப்பு அமைச்சுக்கு ஏன் அதிகளவான நிதி ஒதுக்கப்படுகின்றது - என்றும் கேள்வி எழுப்பினார். (ஐ)

## ஈழத்தமிழர்...

மீனவர்களின் பிரச்னைக்கு தீர்வு காண இரு நாடுகளும் பேச்சுகளை நடத்த வேண்டும். இரு நாடுகளின் அரசாங்கங்களும் பேசுவதைவிட இரு நாடுகளின் மீனவர்களும் பேசுவதே பொருத்தமானது. இரு தரப்பு மீனவர் களும் தமக்குள் பேசி விட்டுக்கொடுப் புகளை செய்து இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணமுடியும்", - என்று கூறினார்.

வரும், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் போட்டியிடுவதை "நல்ல விடயம்", என்று கூறி வரவேற்றார். அத்துடன், "தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தும்போது எங்களுடைய ஒற்றுமையை பார்த்து பெரும்பான்மை இனத்தவர்கள் பயப்பட வேண்டும். இதன் மூலம் எங்களுடைய செய்தி சொல்லப்பட வேண்டும்"- என்றார்.

கி. வீரமணி பங்கேற்ற 'ஸ்பொட்லைற்' நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு ஒளிபரப்பாகும்.

## அநுரகுமார...

திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

வளமான நாட்டையும் அழகிய வாழ்வையும் கொண்டு செல்லும் புதிய மறுமலர்ச்சி பாதைக்கு நாட்டை திருப்புவோம் என்ற தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "இந்த நாட்டுக்கு மாற்றம் தேவை என்று மக்கள் கூறுகிறார்கள். மாற்றம் தேவை என நினைப்பதில் மாத்திரம் பயனில்லை. மாற்றத்துக்கான வாய்ப்பு வர வேண்டும். இப்போது அந்த பலமான மாற்றத்தை ஏற்படுத்துவதற் கான வாய்ப்பு உருவாகியுள்ளது. வலி மையான மாற்றத்தை நோக்கி செல்ல வலுவான சக்தி தேவை. எனவே அந்த அதிகாரத்தை தேசிய மக்கள் சக்திக்கு செப்ரெம்பர் 21 ஆம் திகதி கொடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் மாற்றத்தை ஏற்படுத்த பல்வேறு தலைவர்களை கொண்டு வந்தார்கள் ஆனால் யாரும் அந்த மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பது உங்களுக்கு நினைவிருக்கும். அதனால் கடந்த 76 வருடங்களாக மக்களின் நம்பிக்கைகள் அனைத்தும் தகர்ந்து போனது.

ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருந்தன - அவை வளம் பெற்றன. உலகச் சந்தை மாறிவரும் போது நவீன தொழில்நுட்பம் நாட்டுக்குக் கொண்டு வரப்படவில்லை. அப்போதிலிருந்து எங்களிடம் தேயிலை, தேங்காய், இறப்பர் மட்டுமே உள்ளது.

சந்திரிகா, மகிந்த, கோட்டாபய, மைத்திரிபால, ஆகிய முன்னாள் ஜனாதிபதிகள் அனைவரும் குற்றவாளிகள் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. ரணில் விக்கிரமசிங்கவும் அடிப்படை மனித உரிமைகளை மீறிய குற்ற வாளியா வார்.

இவ்வாறிருக்க ஏனைய நாடுகள் எமது தலைவர்களை எப்படி ஏற்றுக் கொள்ளும்? நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் சட்டத்தை மதிப்பவர்களாக இருக்க வேண்டும். இந்த நாட்டை குற்றவாளிகளால் ஆளப்படும் நாடாகவே உலகம் பார்க்கிறது" - என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

உள்ளூராட்சி தேர்தல்கள் குறித்து உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு மக்களுக்கு கிடைத்த வெற்றி என அவர் குறிப்பிட்டார்.

தேர்தலை தாமதப்படுத்தியது தவறான நடவடிக்கை என தெரிவித்துள்ள அவர், நீதிமன்றம் இதனை உறுதி செய்துள்ளமை நீதியை நோக்கிய முக்கியமான நடவடிக்கை எனவும் கூறினார்.

நீதிமன்றத்தின் இந்த தீர்மானம் ஆச்சரியமளிக்கும் ஒன்றல்ல என தெரிவித்த அவர், தேர்தல்களைப் பிற்போடுவது-ஒத்திவைப்பது மக்களின் உரிமைகளை மீறும் செயல் என நீதிமன்றம் தொடர்ச்சியாக தெரிவித்து வந்துள்ளது என சுட்டிக்காட்டினார்.

தாமதமானாலும் இறுதியாக நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது என நான் கருதுகின்றேன். ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்ததும் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தும் என நான் எதிர்பார்க்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## இந்திய...

மாகாண அபிவிருத்தி சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டன.

இந்த சந்திப்பில், பாராளுமன்ற உறுப்பினர்களான த. கலையரசன், இரா. சாணக்கியன், மட்டக்களப்பு மாநகர முன்னாள் மேயர் சரவணபவன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## அமிர்...

விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளருமான அமிர்தலிங்கத்தின் 97ஆவது பிறந்ததின நிகழ்விலேயே அவர் நினைவுப் பேருரையை நிகழ்த்த வுள்ளார்.

இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் நிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள் ளது. மேல் நீதிமன்ற ஓய்வுநிலை நீதிபதி இ. த. விக்னராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்புரையை தென்னிந்திய திருச்சபை ஆயர் கலாநிதி வி. பத்மதயாளன் ஆற்றுவார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தில் மாற்றங்கள் ஏற்படுத்த முடியாது

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, ஓக. 24

**சர்வதேச நாணயத்துடனான நாணய ஒப்பந்தத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாதென, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

அனுராதபுரத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் போலியான வாக்குறுதிகளை வழங்கி வருகின்றன.

தேர்தல் காலத்தில் மக்களை ஏமாற்றுவதற்காக அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர்.

நீண்டகால திட்டமிடலின் அடிப்படையில், சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளோம்.

அதன் அடிப்படையிலேயே எமக்கு நிதி உதவி கிடைக்கப்பெற்றது.

நாட்டில் எரிபொருள், எரிவாயுவுக்கு நீண்டவரிசை காணப்பட்டமையை மக்கள் மறக்கமாட்டார்கள்.

அவ்வாறானதொரு பொருளாதார நெருக்கடியை ஓரிரு நாட்களிலோ அல்லது, ஓரிரு வாரங்களிலோ தீர்க்க முடியாது.

பொருளாதார பிரச்னையிலிருந்து மீள்வதற்கு இரண்டு வருடங்களுக்கு மேலான காலம் தேவைப்பட்டது. அவ்வாறு மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியே காரணமாக அமைந்தது.

இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்த்தில் மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாக சஜித்தும் அநுரவும் தேர்தல் மேடை களில் பேசி வருகின்றனர். அவ்வாறு செய்ய முடியாதென்பதை திட்டவட்டமாக தெரிவித்து கொள்கிறோம் - என்றார். (அ)

# கட்டட வேலையில் ஈடுபட்ட தொழிலாளி சடலமாக மீட்பு!

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஓக. 24

கிளிநொச்சி - இரத்தினபுரம் பகுதியில் கட்டட வேலை யில் ஈடுபட்டு வந்த தொழிலாளர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

கட்டடத்தின் இரண்டாம் மாடியில் நேற்று முன் தினம் இரவு இருவர் வெல்டிங் வேலை செய்துகொண்டிருந்த நிலையில் ஒருவர் நித்திரைக்கு சென்றிருந்தார்.

மற்றவர் வேலை செய்துகொண்டிருந்ததாகவும் அதிகாலை எழுந்து மற்றவரை காணாது தேடியபோது சடலமாக கீழே காணப்பட்டார் எனவும் பொலிஸாருக்கு தெரிவித்திருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் யாழ்ப்பாணம் ஊர்காவற்துறையைச் சேர்ந்த 34 வயதுடைய சின்னாண்டி பரமேஸ்வரன் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார். (அ)

# வேட்பாளர்களின் கொள்கைகள் குறித்து விவாதம் நடத்தத் தயார்!

## நாமல் ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு, ஓக. 24

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களின் கொள்கைகள் குறித்து விவாதம் நடத்தத் தயார் என பொதுஜன பெரமுனவின் ஜனாதி பதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரதான வேட்பாளர்களின் கொள்கைகள் குறித்து விவாதம் நடத்துவதற்கு அமைப்பின் பகிரங்க அழைப்பை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் ஜனநாயக சமூகத்தில் இருக்கவேண்டிய இத்தகைய விவாதத்தை நடத்துவதற்கான உங்கள் முற்போக்கான முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். இது குடியரசின் மக்கள் வேட்பாளர்களையும் அவர்க ளின் கொள்கைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க உதவும் என நாமல் ராஜபக்ஷ, மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# வவுனியா வைத்தியசாலையில் உயிரிழந்த சிசுவின் சடலம் யாழ்.வைத்தியசாலைக்கு!

வவுனியா, ஓக. 24

வவுனியா வைத்தியசாலையில் இறந்த சிசுவின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டதாக சிரேஷ்ட சட்டத்தரணி தி. திருவருள் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா வைத்தியசாலையில் மரணமடைந்த சிசுவின் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று மருத்துவ பரிசோதனை செய்வதற்கு ஏற்பட்ட இழுபறி நிலைமை தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் மூலமாக தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட சிசுவின் சார்பில் நான் ஆஜராகி சிசுவின் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ பரிசோதனைக்காகக் கொண்டு செல்வதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமை தொடர்பில் மன்றுக்கு தெளிவுபடுத்தி இருந்தேன்.

மன்று குறித்த விசாரணையில் மிகவும் உன்னிப்பாகவும் அவதானத்துடனும் செயற்பட்டு குறித்த சிசுவின் உடலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து செல்வதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கூறியதன் பிரகாரம் வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அன்ரன் புனிதநாயகம் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் ஊடாக ஒழுங்கு படுத்தி தந்திருந்தார்.

சிசுவின் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று ஒப்படைப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த சிசுவின் மரண விசாரணையை திறம்பட செய்யுமாறும் அதனுடைய அறிக்கையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மன்றில் சமர்ப்பிக்கவேண்டுமென பொலிஸாருக்கு கட்டளையிட்டுள்ளது.

சிசுவின் உடலை நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் வைக்குமாறும் மன்றின் கட்டளை இல்லாமல் சிசுவின் உடலில் எவ்வித செயல்பாடுகளும் மேற்கொள்ளாமல் கவனமாக வைக்குமாறும் பொலிஸாருக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரின் பெயர்களும் வாக்குச்சீட்டில் இடம்பெறும்



கொழும்பு, ஓக. 24

2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களின் பெயர்களும் வாக்குச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று முன் தினம் திடீரென மாரடைப்பால் மரணமடைந்ததன் காரணமாக இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக நிறுத்தப்பட்ட மொஹமட் இல்யாஸின் பெயர் வாக்குச் சீட்டில் இடம் பெறுமா என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

எனவே ஜனாதிபதி வேட்பாளர் மொஹமட் இல்யாஸின் பெயர் வாக்குச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அவருக்குப் பதிலாக மாற்று நபரை முன்வைக்க பிரதிநிதிகள் விண்ணப்பித்தால் அதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலை அவதானிப்பதற்கு 12 நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு

கொழும்பு, ஓக. 24

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை அவதானிக்க 12 நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

இதன்படி, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு மற்றும் ஏனைய நாடுகள் இதில் அடங்குவதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு உள்ளிட்ட சகல செயற்பாடுகளையும் அவதானித்து அறிக்கையொன்றை வழங்கவுள்ளதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (அ)

# மக்களுக்கு மானியங்களை வழங்குவதை ஏற்கமுடியாது

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 24

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் மக்களுக்கு மானியங்கள் வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அத்தோடு, வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவ்வாறான சலுகைகள் மக்களுக்கு வழங்கப்படவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

மேலும், மக்களின் பொருளாதார பிரச்னைகளை தீர்க்க மானியங்கள் வழங்குவது அவசியமானால் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அவற்றை வழங்க முடியும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கூறினார். (அ)

# உயர்நீதிமன்ற தீர்ப்பு குறித்து ஆராய கூடுகிறது தேர்தல்கள் ஆணைக்குழு!



கொழும்பு, ஓக. 24

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக நேற்று முன் தினம் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆராய்வதற்காக தேர்தல்கள் ஆணைக் குழு எதிர்வரும் 28ஆம் திகதி கூடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

கடந்த 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தன்னிச்சையாகவும் மற்றும் சட்ட விரோதமாகவும் பிற்போடப்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் நிதியமைச்சர் என்ற வகையில், மக்களின் அடிப்படை உரிமைகளை ஜனாதிபதி மீறியுள்ளதாகவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தேர்தல் நடவடிக்கைகளை முறையாக திட்டமிட்டு நிர்வகிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தவறியுள்ளதாக நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக எதிர்வரும் 28ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஆராயப்படும் என்றும் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க மேலும் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org